636

தாமரை வாசகம்

ஐந்தாம் புத்தகம்

டாக்டர்
மா. இராசமாணிக்கம்,
M.A., L.T., M.O.L., PH.D.

...BY THE REGISTRAR OF BOOKS

1938

நேஷனல் பப்ளிஷிங் ...பெனி
...டி செட்டி தெரு, ...னை-1

அணா 10

TB
O-,8(5)
N49-6
145864

636
3.53

தாமரை வாசகம்

ஐந்தாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 SEP 1953
MADRAS

டாக்டர். மா. இராசமாணிக்கம்,
M.A., L.T., M.O.L., Ph.D.
தமிழ்ப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை–1

பதிப்புரிமை] 1953 [விலை அணா 10

முதற் பதிப்பு—1949
ஆறும் பதிப்பு—1953

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[*Fort St. George Gazette dated* 13—5—1953
Supplement to Part I-B, Page 23]

145864
600 008

TB
0-,6(5)
N42-6

Kabeer Printing Works, Madras (2299)

முகவுரை

1. தாமரை வாசகம்-ஐந்தாம் புத்தகம் என்னும் இந்நூல் ஐந்தாம் வகுப்புப் பிள்ளைகட்கு உரியது. இதில் உள்ள உரைநடைப் பாடங்கள் பல, சென்ற நான்கு பாட நூல்களின் அடிப்படைமீது அமைந்தவை. வாக்கியங்கள் பெரும்பாலும் பழைய சொற்களைக் கொண்டே அமைந்தவை; இடையிடையே இவ்வகுப்புக்கேற்ற முறையில் புதிய சொற்களும் அமைத்து எழுதப்பட்டுள்ளன.

2. பிள்ளைகள் நாட் குறிப்பு எழுதும் பழக்கம், அகராதி பார்க்கும் பழக்கம், பத்திரிகை படிக்கும் பழக்கம், படித்துத் தக்க செய்திகளை எடுத்துச் சேர்க்கும் பழக்கம் என்பவை இவ்வகுப்பில் வற்புறுத்தப்பட்டுள்ளன. கைத்தொழில், விற்பனை அறிவு பற்றிய பாடங்களும் தமிழ் இலக்கியம், தமிழ் நாடு, புதைபொருள் ஆராய்ச்சி, உலகம் தெரிந்த வரலாறு முதலிய பல பொருள்பற்றிய பாடங்களும் நேரிய முறையில் தரப்பட்டுள்ளன. பிள்ளைகள் பழமையான நாட்டுச் சின்னங்களைப் பாதுகாக்க அவற்றின் சிறப்பினை உணரவேண்டும் என்பதற்கு 'வரலாற்றுச் சின்னங்கள்' என்னும் பாடம் சேர்க்கப்பட்டுள்ளது. பிள்ளைகள் தந்நம்பிக்கை, மனவுறுதி, இடைவிடாவுழைப்பு இவற்றைக் கைக்கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்த 'உழைப்பும் உயர்வும்' என்னும் பாடம் தரப்பட்டுள்ளது.

3. இக்காலக் கவிஞர்களாகிய பாரதியார், பாரதி தாசன், நாமக்கல் கவிஞர், தேசிக விநாயகம் பிள்ளை இவர்தம் பாடல்கள் இடமறிந்து தக்க படவிளக்கத்துடன் சேர்க்கப்பட்டுள்ளன ; செய்யுட் பகுதியில் பழைய பாடல்களும் தரப்பட்டுள்ளன.

4. உரைநடை, செய்யுட்பாடச் சொற்களும் அரும் பொருள் பாடந்தோறும் தரப்பட்டுள்ளது. கேள்விகள், பயிற்சிகள், இவ்வகுப்புக்குரிய இலக்கணம், பிள்ளை களுடைய அறிவை வளர்க்கும் வேறு பல பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன. பெரும்பாலான பாடங் களுக்குத் தகுந்த படவிளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

5. இந்நூல் பிள்ளைகட்கு அறிவு விருந்தாகும் ; அறிவுச் செல்வமாகும். இந்நூல் நல்லறிஞர் நன் மதிப்பைப் பெறும் என்னுந் துணிபுடையேன்.

தியாகராசர் கல்லூரி,
மதுரை.

மா. இராசமாணிக்கம்

உள்ளுறை

எண்	பொருள்		பக்கம்
1.	சங்க காலத் தமிழ்நாடு	...	5
2.	நாட்குறிப்புச் சுவடி	...	9
3.	தமிழ் அகராதி	...	13
4.	அறிவு நுட்பம் (படப்பயிற்சி)	...	17
5.	காடு	...	19
6.	பள்ளியில் கைத்தொழில்	...	22
7.	மதுரைத் தமிழ்ச் சங்கங்கள்	...	27
8.	பத்திரிகைச் செய்திகள்	...	31
9.	உவமைகள்	...	35
10.	ஒற்றுமையாக உழைப்போம்	...	38
11.	மணிமேகலை	...	40
12.	விற்பனை அறிவு (ஒரு சொற்பொழிவு)	...	43
13.	சிற்றூரும் பட்டணமும்	...	47
14.	நெசவுத்தொழில் (படப்பயிற்சி)	...	50
15.	அறிவும் ஆராய்ச்சியும்	...	52
16.	உலகம் தெரிந்த வரலாறு	...	57
17.	சொல் தவறாத பேரரசர்	...	61
18.	கடிதங்கள்	...	65
19.	கைத்தொழில்	...	69
20.	புதைபொருள் ஆராய்ச்சி	...	71
21.	பெரியோர் உரைநடை	...	75
22.	நம் வரலாற்றுச் சின்னங்கள்	...	79
23.	உழைப்பும் உயர்வும்	...	84
24.	வாழ்க்கையில் வெற்றி	...	88
25.	வீரத்தமிழ்ப் பெண்மணி (நாடகம்)	...	93

எண்	பொருள்	பக்கம்
	செய்யுட்பாடம்	
I.	நீதிப் பகுதி—	
1.	வாக்குண்டாம் ...	98
2.	நல்வழி ...	99
3.	நீதிவெண்பா ...	100
4.	சதகத்திரட்டு ...	102
5.	விவேக சிந்தாமணி ...	105
II.	கதைப் பகுதி—	
1.	புத்தர் அறிவுரை ...	106
2.	புலியும் பிராமணனும் (பஞ்ச தந்திரக் கதை) ...	107
III.	பலசுவைப் பகுதி—	
1.	ஆல் - விழுது - வேர் ...	109
2.	ஆற்று வெள்ளம் ...	110
3.	தமிழன் சிறப்பு ...	112
4.	ஆற்றங்கரை நிலவில் ...	114
5.	மாலைக்கால வருணனை ...	116
6.	வாழ்த்து ...	117
7.	தமிழ்நாட்டு வணக்கம் ...	118

தாமரை வாசகம்

ஐந்தாம் புத்தகம்

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;
மாலை முழுதும்விளை யாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

—பாரதியார்.

படப் பயிற்சி—1

காகமும் நாகமும்

படம் பார்த்துக் கதை சொல் :



படப் பயிற்சி—2

பொருட் காட்சிச்சாலை

படத்திற்கு ஒரு வாக்கியம் சொல் :





சங்க காலத் தமிழகம்
(கி.மு. — கி.பி. 400)
75
80
15
10
கிருஷ்ணை
வடபெண்ணை
வேங்கடம்
தொண்டைநாடு
காஞ்சிபுரம்
கடல்மல்லை
பாலாறு
காவிரி
தகடூர்
தென்பெண்ணை
திருக்கோவலூர்
மரக்காணம்
புதுச்சேரி
(பொதுசா)
கொங்கு நாடு
கொல்லிமலை
தொண்டி
சோழ நாடு
காவிரிப் பூம்பட்டினம்
ஆலூர்
முதிரமலை
உறையூர்
நாகப்பட்டினம்
வஞ்சி
முசிறி
பழநி மலை
பிரான்மலை(பறம்புமலை)
மதுரை
பாண்டி நாடு
வைகை
நள்ளி நாடு
பொதியமலை
நாஞ்சில்மலை
கொற்கை
கன்னிமுனை
இலங்கை
வங்காளக் குடா
வள்ளல்கள் ஆண்ட சிறிய நாடுகள்
தலை நகரங்கள்
துறைமுகப் பட்டினங்கள்
புலவர்கள் வாழ்ந்த ஊர்கள்

1. சங்க காலத் தமிழ் நாடு

1. நாம் பேசும் மொழி தமிழ். தமிழ் பேசுகின்றவர் தமிழர். தமிழ் வழங்கும் நாடு தமிழ் நாடு. வடக்கே வேங்கடமலையும் தெற்கே கன்னிமுனையும் மேற்கே மலையாள நாடும் கிழக்கே வங்கக் கடலும் இன்றைய தமிழ் நாட்டு எல்லைகள் ஆகும்.

2. பழைய காலத்தில் மலையாள நாடு தமிழ் வழங்கிய நாடாய் இருந்தது. அது சேரன் செங்குட்டுவன் தமிழ் வளர்த்த நாடு; அவன் தம்பியாராகிய இளங்கோ அடிகள் சிலப்பதிகாரம் பாடிய நாடு. அது நாளடைவில் மொழியில் வேறுபட்ட நாடாயிற்று.

3. பழந்தமிழ் நாடு சேர - சோழ - பாண்டிய நாடுகள் என்று மூன்றுயப் பிரிந்திருந்தது. சேர நாடே முன்சொன்ன மலையாள நாடு. சோழ நாடு என்பது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களைக் கொண்டது. பாண்டிய நாடு என்பது மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களைக் கொண்டது.

4. சேர - சோழ - பாண்டிய நாடுகள் போக, எஞ்சிய நிலப் பகுதியில் சிற்றரசர் பலர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் பேரரசர்க்கு ஒரு சமயம் நண்பராயும் மறு சமயம் மாறுபட்டும் இருந்தனர். பேரரசர்க்குள்ளும் சிற்றரசர்க்குள்ளும் நட்பும் பகைமையும் மாறி மாறி இருந்த காலங்களும் உண்டு.

5. சேர நாட்டின் தலைநகர் வஞ்சி மாநகரம். சோழ நாட்டின் தலைநகரம் காவிரிப்பூம்பட்டினம். சோழர் தலைநகரம் துறைமுகப் பட்டினம் ஆகும்.

பாண்டியர் தலைநகரம் மதுரை. கொற்கை என்பது துறைமுகப்பட்டினம்.

6. சேர நாட்டிலிருந்து மயில் தோகை, யானைத் தந்தம், மிளகு, தேக்கு, அகில், சந்தனம் என்பவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாயின. சோழ நாட்டிலிருந்து ஆடைகள், உணவுப் பொருள்கள் முதலியன ஏற்றுமதியாயின. பாண்டிய நாட்டிலிருந்து சிறப்பாக முத்துக்களும் மெல்லிய ஆடைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன. சங்க காலத்தில் தமிழ் நாடு, கடல் வாணிகத்தில் சிறந்திருந்தது.

7. சேர — சோழ — பாண்டியர் முடியுடை மூவேந்தர் எனப்பட்டனர். அவர்களும் சிற்றரசரும் தம் தாய் மொழியாகிய தமிழைத் தம் உயிர் எனக் கருதினர். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்னும் மூவகைத் தமிழில் வல்ல புலவர்—பாணர்—கூத்தர் என்பவர்களை ஆதரித்தனர். அதனால் இயற்றமிழ் நூல்கள், இசைத்தமிழ் நூல்கள், நாடகத் தமிழ் நூல்கள் வளர்ச்சி பெற்றன. மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்து தமிழ் நூல்களைப் பெருக்கியது. அக்காலம் சங்க காலம் எனப்பட்டது.

8. சங்க காலத்தில் ஆடவரும் பெண்டிரும் அழுத்தமாகக் கல்வி கற்றனர். எல்லா வகுப்பினரும் வேறுபாடு இன்றிக் கற்றுச் சிறந்தனர். அரசர்கள் கற்றவர்களையே மதித்தனர்; பெண்பாற் புலவர்க்குப் பெருஞ் சிறப்புச் செய்தனர். அப்பெண்பாற் புலவருள் சிறந்தவர் ஔவையார். அவர் அதியமானிடமிருந்து தொண்டைமானிடம் அரசியல் தூதராய்ச் சென்றவர் அல்லவா? இதிலிருந்து அக்காலப் பெண்மணிகள் நிலையை நாம் ஒருவாறு அறியலாம்.

9. சங்க காலத்தில் தமிழ் நாட்டைத் தமிழன் ஆண்டான் ; நாடு நலம் பெற்றது ; மொழி வளம் பெற்றது ; கல்வி எங்கும் பரப்பப்பட்டது. புலமை பெற்ற வேட்டுவச்சி, பாணத்தி, காவற்பெண்டு முதலிய மகளிரும் சமூகத்தில் சிறப்புப் பெற்றனர். குடி மக்கள் நிலவளம்–நீர்வளம்–மொழிவளம்–அறிவு வளம் பெற்று இன்பமாய் வாழ்ந்தனர். அப்பழந் தமிழர் புகழ் என்றும் நின்று நிலவுக !

அரும்பொருள்

மொழி - மொழியப்படுவது, பேசப்படுவது, பாஷை. நாளடைவில் - காலப்போக்கில். மாவட்டம் - ஜில்லா. எஞ்சிய - பாக்கியுள்ள. பட்டினம் - கடற்கரை நகரம். பட்டணம் - உள்நாட்டு நகரம். இயற்றமிழ் - செய்யுளும் உரைநடையும். இசைத்தமிழ் - தாளத்துடன் பாடப்படும் தமிழ்ப்பாக்கள். நாடகத்தமிழ் - உரையும் பாட்டும் கூடி நாடக முறையில் இருப்பது. புலவர் - இயற்றமிழ் நூல்கள் செய்பவர். பாணர் - பாடகர். கூத்தர் - நடிகர். நிலவுக - நிலைபெறுவதாக.

பயிற்சி

I. விடை கூறு :—

1. பழந்தமிழ் நாட்டு எல்லைகள் எவை ?
2. இன்றைய தமிழ்நாட்டு எல்லைகள் எவை ?
3. சேர-சோழ-பாண்டிய நாடுகள் எவை ?
4. அவற்றின் தலைநகரங்கள் யாவை ?
5. தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதியான பொருள்கள் எவை ?
6. சங்க காலத்தில் இருந்த மூவகைத் தமிழ்ப் பிரிவுகள் யாவை ?
7. மூவகைத் தமிழில் வல்லவர் யாவர் ?
8. அரசர்கள் அவர்களை ஏன் ஆதரித்தார்கள் ?
9. அக்காலத்தில் கல்வி நிலை எப்படி இருந்தது ?
10. அக்காலத்தில் எவை வளம் பெற்றிருந்தன ?

II. 1. மறுசமயம், துறைமுகம், ஏற்றுமதி, வாணிகம், வேறுபாடு, எஞ்சிய—இவற்றை உன் சொந்த வாக்கியங் களில் அமைத்துச் சொல்.

2. பேரரசர், பிரிந்து, நட்பு, மாறுபாடு, வெளிநாடு, ஏற்றுமதி—எதிர்ச்சொற்கள் கூறு.

3. மாறிமாறி, வரவர, போகப்போக—என்று ஒரு சொல் இரண்டு அல்லது பல முறை அடுக்கி வருதல் அடுக்குத்தொடர் எனப்படும். இத்தகைய நான்கு தொடர் களைச் சொல்.

4. சேர்த்துப் படி :—நாடு+ஆய், நாடகம்+தமிழ், தமிழ்+புலவர், காவல்+பெண்டு, சிறப்பு+பெறு.

5. பேரரசர்=பெருமை+அரசர்
சிற்றரசர்=சிறுமை+அரசர்

ஆருயிர், தண்ணீர், வெந்நீர்—இவற்றைப் பிரி.

III. (1) கண்ணன் வந்து, (2) கண்ணன் வந்தான், (3) வந்த கண்ணன்—ஒவ்வொன்றும் இரண்டு சொற்க ளால் ஆனது ; சொற்றொடர் (சொல்தொடர்) எனப்படும். இவற்றில் கருத்து முடிந்து நிற்கும் சொற்றொடர் எது? கண்ணன் வந்தான்—என்பதே கருத்து முடிந்து நிற்கும் சொற்றொடர். இவ்வாறு கருத்து முற்றி நிற்கும் சொற் றொடர் முற்றுச் சொற்றொடர் அல்லது வாக்கியம் எனப்படும்.

கண்ணன் வந்து, வந்த கண்ணன்	—இவற்றுள் ஒவ்வொன்றும் கருத்து முடியாத (குறைந் துள்ள) சொற்றொடர் ; அதனால் எச்சச் சொற்றொடர் எனப் படும்.

வாக்கியத்தின் முடிவில் ‘ இது வாக்கியம் ’ என்பதை உணர்த்த முற்றுப்புள்ளி இடவேண்டும். . இது முற்றுப் புள்ளி.



2. நாட்குறிப்புச் சுவடி

1. குழந்தாய், நீ தினந்தோறும் பல வேலைகளைச் செய்கிறாய்; பலரோடு பழகுகிறாய்; ஊரில் பல நிகழ்ச்சிகளைக் கவனிக்கிறாய். இவற்றிலிருந்து பல படிப்பினைகளை அறிய உனக்கு வாய்ப்பு உண்டு. இத்தகைய படிப்பினைகளை அவை வெளிப்பட்ட சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு ஒரு தனி நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்துக்கொள்ளுதல் நல்லது.

2. அறிஞர் பேச்சுக்கள் நிகழும் நாட்கள், நாட்டுத் தலைவர்கள் உன் ஊருக்கு வரும் நாட்கள், அரிய மாநாடுகள் கூடும் நாட்கள் இவற்றைக் குறித்துக்கொள்ளவும். அந்த நோட்டுப் புத்தகம் பயன்படும். இங்ஙனம் நாள்தோறும் குறித்துக் கொள்ளப்படும் அந்த நோட்டுப் புத்தகத்தை **நாட்குறிப்புச் சுவடி** என்று கூறலாம் அல்லவா?

3. **கண்ணன்** என்னும் ஐந்தாம் வகுப்பு மாணவன் தனது நாட்குறிப்புச் சுவடியில் பல செய்திகளை எழுதி வைத்துள்ளான். அவற்றில் சில இங்குத் தரப்படும். அவற்றைப் போலக் குறிக்கத் தகும் செய்திகளை நீ குறித்துக்கொள். இச்செய்திகளை உன் கட்டுரைகளிலோ, சொற்பொழிவுகளிலோ இடமறிந்து ஆளுதல் கட்டுரையை அல்லது சொற்பொழிவை அழகு செய்யும்.

சுவடிக் குறிப்புக்கள்

அக்டோபர் 10, 1949.

நான் பள்ளிக்குப் போகும்பொழுது என்னுடன் வந்த என் வகுப்பு மாணவன் கோபாலன் வழியில் கிடந்த வாழைப்பழத்தோல் சறுக்கிக் கீழே விழுந்தான்.

மிக்க விரைவாய் எதிரில் வந்துகொண்டிருந்த சைக்கிள் வண்டி அவன் கால்மீது ஏறிவிட்டது. நான் அவனை உடனே ஒரு ரிக்ஷா வண்டியில் உட்காரவைத்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன்.

நம் மக்கள் கல்வி இல்லாமையாலும் கவனக் குறைவாலும் வாழைப்பழத் தோலைப் பலர் நடமாடும் பாதைகளில் போடுகிறார்கள். அவர்கள் செயல் பலர்க்குத் தீமை தருகிறது என்பதை அவர்கள் உணர்வதில்லை. இத்தகைய முக்கியமான செய்திகளைப் பொதுமக்கள் உணரும்படி செய்யவேண்டுவது கற்றறிந்தோர் கடமையாகும்.

அக்டோபர் 12, 1949.

இன்று எங்கள் பள்ளி திறக்கப்பட்டது. காலாண்டுத் தேர்வுமுடிவு கூறப்பட்டது. நான் எல்லாப் பாடங்களிலும் 50-க்கு மேற்பட்டு 60-க்கு உட்பட்ட மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறேன். அரையாண்டுத் தேர்வில் 60-க்கு மேல் வாங்க முயற்சிப்பேன்.

அக்டோபர் 15, 1949.

என் மாமா அன்பழகர் ஊரிலிருந்து வந்தார். அவர் ஊருக்கு உழைப்பவர்; தந்நலம் இல்லாதவர். "வீடு இல்லாது தெருவில்—சாக்கடை ஓரத்தில் வாழும் ஏழை மக்கள் வீடுபெற்று நம்மைப்போல் வாழும் நாளே நமது நாடு 'நாகரிக நாடு' என்று சொல்லப்படும்; நாம் 'நாகரிக மக்கள்' என்று அறிஞரால் மதிக்கப்படுவோம். நீ இதை மறவாதே," என்று என்னிடம் கூறினர். அவர் சொற்கள் என் உள்ளத்தில் பதிந்தன.

அரும்பொருள்

சுவடி - புத்தகம். வாய்ப்பு - சந்தர்ப்பம். கவனக்குறை- அஜாக்கிரதை. இத்தகைய - இம்மாதிரியான. நடமாடும் - இயங்கும், போய்வரும். மதிப்பெண் - மார்க்கு.

பயிற்சி

I. விடை கூறு :—

1. நாட்குறிப்புச் சுவடி என்பது யாது?
2. அதன் பயன் என்ன?
3. கண்ணன் சுவடிக் குறிப்புக்கள் யாவை?
4. அவை கற்பிக்கும் நீதிகள் யாவை?

II. குழந்தாய், தமிழ்ப் பாடங்களைப் படிப்பதால் மட்டும் நீ பிழையில்லாமல் எழுத முடியாது. உன் பேச்சுத் திருந்த

வேண்டும். நேத்து, இண்ணைக்கு என்று சொற்களைப் பிழைபடச் சொல்வதை நிறுத்து; நேற்று, இன்று என்று சரியான சொற்களைச் சொல்லிப் பழகு. உனது பேச்சுப் பிழை இல்லாதிருந்தால், உனது தமிழ் நடை பிழையற்று இருக்கும். இதை மறவாதே.

III. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்துப் பழமொழிகளை நிறைவாக்கு :—

1. —— அழகு —— தெரியும்.
2. பணம் —— பிணம்.
3. கைக்கு —— வாய்க்கு ——.
4. கைப்புண்ணுக்குக் —— வேண்டுமா ?

IV. கண்ணன் வந்தான்
கண்ணன் வந்து
வந்த கண்ணன்

இவற்றில் 'கண்ணன்' என்பது மூன்று தொடர்களிலும் வந்துள்ளது. ஆனால் வினைச்சொற்களே வேறுபடுகின்றன. அவற்றுள் 'வந்தான்' என்பதே கருத்து முற்றியிருப்பது. வந்து, வந்த என்பவை கருத்து முடியாத (எச்சச்) சொற்கள். முன்னது வினைமுற்று; பின்னவை எச்சங்கள். வினைமுற்று வரும் சொற்றொடர் முற்றுச் சொற்றொடர் ஆகும், எச்சம் வரும் சொற்றொடர் எச்சச் சொற்றொடர் ஆகும் என்பன இவற்றிலிருந்து தெரிகின்றன அல்லவா ?

இப்பாடத்திலிருந்து எச்சச் சொற்றொடருக்கு நான்கு உதாரணங்கள் தருக.



3. தமிழ் அகராதி

1. நமக்குப் பொருள் விளங்காத சொற்களின் பொருள்களைத் தெரிவிக்கும் நூல் அகராதி எனப் படும். தமிழ் எழுத்துக்கள் அ முதல் னௌ வரை (ஃ சேர்ந்து) இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்கள் அல்லவா? அகரம் (அ) ஆதிய (முதலான) எழுத்துக்களால் ஆன சொற்களையும் அவற்றின் பொருள்களையும் கூறும் நூல் அகராதி (அகர ஆதி) எனப் பெயர் பெற்றது முறைதானே?

2. அகராதியில் உள்ள சொற்கள் எவ்வாறு தொகுக்கப்பட்டன? தமிழ் நூல்களில் வந்துள்ள சொற்கள் எல்லாம் அவற்றுக்குரிய பொருள்களுடன் திரட்டப்பட்டன; பிறகு அவை அகர முறையில் வரிசைப்படுத்தப்பட்டன. பின்னர் அவை நூல் வடிவில் அச்சிடப்பட்டன. அகர முறையில் வரிசைப் படுத்தப்பட்டதால், நாம் எளிதில் சொற்களைக் கண்டு பிடித்துப் பொருள் உணர்கிறோம்.

3. பழங் காலத்தில் தமிழில் அகராதிகள் இல்லை. ஐரோப்பியர் நம் நாட்டிற்கு வந்து, தமிழைப் படித்தனர்; தமிழில் நூல்கள் செய்தனர். அவருள் இத்தாலிய நாட்டார் ஒருவர். அவர் தம் பெயரை வீரமாமுனிவர் என்று தமிழில் வைத்துக்கொண்டார். அவர் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகட்கு முன் தமிழில் முதல் முதல் அகராதி செய்து தந்த அறிஞர். அந்த அகராதிக்குச் சதுர் அகராதி என்பது பெயர்.

4. சதுர் அகராதிக்குப் பிறகு பல அகராதிகள் தமிழில் வெளிவந்தன. ஆனால் அவை அனைத்தையும் விடச் சிறந்த அகராதி ஒன்று வெளியிடச் சென்னை அரசாங்கம் விரும்பியது. அதற்கென்று தமிழ் அறிஞர் சிலர் நியமிக்கப்பட்டனர். அந்த வேலையைச் சென்னைப் பல்கலைக் கழகம் ஏற்றுக்கொண்டது. பல ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்ப் பேரகராதி என்னும் பெயரில் ஏழு பெரிய பகுதிகள் வெளியிடப்பட்டன. அப்பேரகராதியின் விலை ஐம்பத்தாறு ரூபாய்.

5. பேரகராதி தயாரிப்பது எளிய செயல் அன்று. அதனைத் தயாரிப்பவர் தமிழில் பேரறிஞராயிருத்தல்வேண்டும்; எல்லாத் தமிழ் நூல்களையும் அறிந்தவராயிருத்தல் வேண்டும். பேரகராதி தயாரிக்க அமைந்தவர் அறிஞரே ஆவர். அக்குழுவினர்க்குத் தலைவர்– இராவ்சாஹிப் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி, எல். அவர்கள். இப்பெரியார் தமிழ் நூல்களில் நிரம்பிய புலமை பெற்றவர்; எப்பொழுதும் தமிழ் நூல்களைப் படிப்பதையும் ஓலைச் சுவடிகளை ஆராய்ந்து அச்சடித்தலையும் நூலாராய்ச்சி செய்வதையுமே வேலையாய்க் கொண்டவர். இவரது

தலைமையில் பேரகராதி வெளி வந்தது பாராட்டத் தக்கது.

6. அகராதி பார்ப்பது எப்படி? 'கண்டம்' என்பதன் பொருளைக் காண்பது எப்படி? முதலில் 'க' கர வரிசையுள்ள ஏட்டை எடுத்துக்கொள்; பிறகு இரண்டாம் எழுத்தை மட்டும் பார்த்துவா. இந்த எழுத்து க், ங், ச், ஞ், ட், ண் என்னும் முறையில் அமைந்திருக்கும். அதனால் ககர வரிசையில் 'ண்' எங்கே தொடங்குகிறது என்பதை வரிசையாய்ப் பார்த்துவா; 'கண்டம்' என்னும் சொல் எளிதில் அகப்படும்; உடனே அதன் பொருளை அறியலாம்.

அரும்பொருள்

திரட்ட - சேர்க்க. குழுவினர் - கூட்டத்தார்.

பயிற்சி

I. விடை கூறு :—

1. அகராதி என்பது யாது?
2. அகராதி—இதன் பொருள் யாது?
3. அகராதியில் உள்ள சொற்கள் எவ்வாறு தொகுக்கப்பட்டன?
4. தமிழ் அகராதியை முதன் முதல் வெளியிட்டவர் யார்?
5. தமிழ்ப் பேரகராதி—இதனை வெளியிட்டவர் யார்?
6. பேரகராதிக் குழுவினர் எப்படிப்பட்டவர்?
7. அக்குழுவின் தலைவர் யார்?
8. அகராதி பார்ப்பது எப்படி?
9. அறம்—இதனை அகராதியில் எவ்வாறு பார்ப்பது?
10. உன் வீட்டில் அகராதி உண்டா?

II. 1. அகராதி, பேரகராதி, ஆராய்ச்சி, தொகுக்க, முறையில்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. தொகுக்க, சேர்க்க, திரட்ட — இவை ஒரே பொருளை உணர்த்தும் பல சொற்கள். இவை போல ஒரு பொருளைத் தரும் சில சொற்களைச் சொல்.

3. முதல் பத்தியில் உள்ள எ. ப. செ. கூறு.

4. நான்காம் பத்தியில் உள்ள வினைமுற்றுக்களைச் சொல்.

5. ஐந்தாம் பத்தியில் உள்ள ஒருமை பன்மைகளைக் கூறு.

III. (கண்ணன்) வந்தான்—வினைமுற்று
(கண்ணன்) வந்து (போனான்)—
வந்த (கண்ணன்)—

(1) வந்து என்பது ஒரு வினைச் சொல்லைத் தழுவியே வரும். ஆதலால் அது வினையெச்சம் எனப்படும்.

(2) வந்த என்பது ஒரு பெயர்ச் சொல்லைத் தழுவியே வரும். ஆதலால் அது பெயரெச்சம் எனப்படும்.

(3) நடந்து, நின்று, பேசி, தாங்கி—வினையெச்சங்கள்.

(4) நடந்த, நின்ற, பேசின, தூங்கின—பெயரெச்சங்கள்.

இப்பாடத்தில் உள்ள பெயரெச்ச, வினையெச்சங்களை எடுத்தெழுது.

IV. இராமன் வந்து, முருகனைப் பார்த்து, மாளிகைக்குச் சென்றான். —இந்த வாக்கியத்தில் வினையெச்சங்களை அடுத்து இடப்பட்டுள்ள குறி, கால் புள்ளி (காமா) என்பது. படிக்கும்பொழுது பொருள் விளங்குவதற்காக இக் குறி சில இடங்களில் இடப்படும்.

4. அறிவு நுட்பம்

(படப் பயிற்சி)

படம் பார்த்துக் கதை சொல்; பிறகு எழுது :



I. விடை கூறு :—

1. சிங்கள நாட்டு அரசன் நந்தரிடம் அனுப்பியது யாது ?

2. அவன் விடுத்த கேள்வி யாது ?

3. நந்தர்களே அக்கேள்விக்குப் பதில் சொன்னார்களா ?

4. அக்கேள்விக்குப் பதில் சொன்னவன் யார் ?

5. அவன் எங்கு இருந்தான் ?

6. அவன் எவ்வாறு பதில் சொன்னான் ?

7. நீ இப்பாடத்திலிருந்து அறிவது யாது ?

பயிற்சி

II. 1. இக்கதையை நந்தர் சொல்வது போலச் சொல்.

2. இதனைச் சந்திரகுப்தனே சொல்வது போலச் சொல்.

3. இதனை மெழுகு சொல்வது போலச் சொல்.

III. ஒரு கருத்தினை விளக்கும் பல வாக்கியங்களின் தொகுப்பே பத்தி (பாரா) எனப்படும்.

இப்புத்தகத்தில் ஒவ்வொரு பாடத்திலும் பல பத்திகள் இருத்தலைப் பார்; முதல் மூன்று பாடங்களைக் கவனி; பத்திகளை எண்ணிச் சொல். பல பத்திகள் சேர்ந்தது ஒரு பாடம்.

IV. கண்ணன் கடைக்குப் போனான் ; ஆறணா கொடுத்தான் ; ஒரு புத்தகம் வாங்கினான். —இந்த வாக்கியத்தில் கண்ணன் என்பது எழுவாய். ஒரே எழுவாய்க்குப் (1) போனான், (2) கொடுத்தான், (3) வாங்கினான் என மூன்று பயனிலைகள் வருகின்றன. அதனால் கடைசி வினைமுற்றுக்குப் பக்கத்தில் முற்றுப் புள்ளியும், அதற்கு முன் வந்துள்ள வினைமுற்றுகளுக்குப் பக்கத்தில் அரைப் புள்ளியும் (செமிகோலன்) இடவேண்டும். முன் பாடங்களைப் படித்து இக்குறி இடப்பட்டுள்ள இடங்களைத் தெரிந்துகொள்.

5. காடு

1. செருந்திஆச் சாஇ லந்தை
தேக்கீந்து கொன்றை எல்லாம்
பெருங்காட்டின் கூரை ; அந்தப்
பெருங்கூரை மேலே நீண்ட
ஒருமூங்கில் இருகு ரங்கு
கண்டேன்பொன் னூசல் ஆடல் ;
குருந்தடை யாளம் கண்டேன் ;
கோணல்மா மரமும் கண்டேன்.

2. ஆனைஒன் றிளம ரத்தை
முறித்திடும் ; ஆந்தைக் கூட்டைப்
பூனைஒன் றணுகும் ; அங்கே
புலி ஒன்று தோன்றும் ; பாம்பின்
பாளைவாய் திறக்கக் கண்டு
யாவுமே பறக்கும் ; கன்றோ
மானைக்கா ணுது நிற்கும் ;
அதைஒரு நரிபோய் மாய்க்கும்.

—பாரதிதாசன்

அரும்பொருள்

செருந்தி, ஆச்சா, இலந்தை, தேக்கு, ஈந்து (ஈச்ச மரம்), கொன்றை - மரவகைகள். குருந்து - குருந்தமரம். பொன் - அழகிய. மாய்க்கும் - கொல்லும். பாளைவாய் - மிகப் பெரிய வாய்.

பயிற்சி

I. 1. இப்பாக்களின் பொருளைப் பத்து வரிகளில் எழுது.

2. இங்குள்ள மரப்பெயர்களுடன் நீ அறிந்த வேறு மரப்பெயர்களையும் எழுது.

3. தோன்றும், அணுகும், பெருங்கூரை, காணுது, அடையாளம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

II. 1. மேற்கூறப்பட்டுள்ள விலங்குகளில் இறைச்சி தின்பவை எவை? இறைச்சி தின்னுதவை எவை?

2. அவ்வுயிர்களின் இளமைப் பெயர்கள் யாவை?

3. இவற்றைப்படி :—

கூரை - மேல் கூரை	கூறை - புடைவை
மரம் - தாவரவகை	மறம் - கொடுமை, வீரம்
புலி - ஒரு விலங்கு	புளி - புளியம்பழம்.
பரக்கும் - வியாபிக்கும்	பறக்கும் - பறந்துபோகும்
குரங்கு - ஒரு விலங்கு	குறங்கு - தொடை

III. பாராவுக்குத் தலைப்புத் தருதல் :—மூன்றும் பாடத்தில் ஆறு பத்திகள் இருக்கின்றன. ஒவ்வொரு பத்தியும் ஒரு பொருளை விளக்குகிறது. நீ ஒவ்வொன்றையும் படி; அதற்கு ஏற்ற தலைப்புக் கொடு. (1) முதல் பத்தியில் அகராதி என்பதன் பொருள் விளக்கப்பட்டுள்ளது. அதனுல் 'அகராதி என்பது யாது?' என்பது அப் பகுதியின் தலைப்பாக அமையலாம். (2) இரண்டாம் பத்தியில் 'சொற்கள் தொகுக்கப்பட்ட முறை' கூறப் பட்டுள்ளது. எனவே, அதுவே தலைப்பாக அமையலாம். (3) அடுத்த பத்தி தமிழ் அகராதிகள் உண்டானவிதம்பற்றிக் கூறுகிறது. அதனுல் 'தமிழ் அகராதிகளின் தோற்றம்' என்பது அதன் தலைப்பாகலாம். (4) அடுத்த பத்திக்குத் 'தமிழ்ப் பேரகாரதி' என்று தலைப்புத் தரலாம். (5) ஐந் தாம் பத்திக்குப் 'பேரகாரதிக் குழுவின் தலைவர்' என்பது தலைப்பாக அமையலாம். (6) ஆறும் பத்திக்கு 'அகராதியைப் பார்க்கும் முறை' என்பது தலைப் பாகலாம்.

நீ ஒவ்வொரு பாடத்திற்கும் இவ்வாறு தலைப்புத்தரப் பழகவேண்டும்.

6. பள்ளியில் கைத்தொழில்

1

2

1
எருமை மாட்டுக்கொம்பிலிருந்து கொக்கு செய்வதற்குக்கொம்பில் உருவம் எழுதப்பட்டுள்ளது

2
உருவம் செய்யவேண்டிய அளவிற்குக்கொம்பை அறுக்கிறான்.

3
உளியைக் கொண்டு உருவம் வெட்டுகிறான்.

4
உருவத்தின் நுண்ணிய பாகங்களை அரத்தைக் கொண்டு ராவி எடுக்கிறான்.

5
உருவத்திற்குப் பள பளப்பு உண்டாக்க உப்புத்தாளைக் கொண்டு தேய்க்கிறான்.

3

5

6


6
செய்யப்பட்ட உருவங்கள்

1. நான் ஐந்தாம் வகுப்பு மாணவன். என் பெயர் தொல்காப்பியன். நான் என் வகுப்பு மாணவருடனும் ஆசிரியருடனும் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையைப் பார்க்கச் சென்றேன். வாலாஜாபாத் செங்கற்பட்டிலிருந்து காஞ்சீபுரம் செல்லும் வழியில் இருக்கிறது. ஊர் பாலாற்றங்கரையில் அமைந்திருக்கிறது. பாடசாலை பாலாற்றங்கரையில் பெரிய தோட்டத்திற்குள் அமைந்திருக்கிறது.

2. அப்பள்ளி எட்டு வகுப்புகளை உடையது. அது ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகளாய் நடந்துவருகிறது. அதனால் சுற்றுப்புறக் கிராம மக்கள் அங்குக் கல்வி பயில்கின்றனர். அங்கு மாணவர் இல்லம் ஒன்று இருக்கிறது. அதனில் ஏறக்குறைய அறுநூறு மாணவர் இருக்கின்றனர். பாடங்கள் செவ்வனே கற்பிக்கப்படுகின்றன. பிள்ளைகள் உடற்பயிற்சியால் சிறந்து விளங்குகின்றனர்.

3. பிள்ளைகள் அப்பள்ளியில் புத்தகக் கல்வியுடன் பயிர்த்தொழிலும், பலவகைக் கைத்தொழில்களும் கற்கின்றனர். பள்ளிக்கு எதிரில் விளைநிலம் இருக்கிறது. அதனில் உயர்வகுப்பு மாணவர் ஏர் உழுதல், நீர்பாய்ச்சுதல், களை எடுத்தல், நெல் விதைத்தல், வாழை, கத்தரி, வெண்டை முதலியவற்றைப் பயிரிடல் முதலிய வேலைகளை நன்ருய்ச் செய்கின்றனர்.

4. அப்பள்ளியை இத்தனை ஆண்டுகளாய் நடத்திவருபவர் ஒரு பெரியார். அவர் பெயர் மாசிலாமணி முதலியார் என்பது. அவர் எல்லாப் பிள்ளைகளையும் தம் பிள்ளைகளைப் போலக் கவனிக்கிருர். அதனுல் மாணவர் அவரை ‘அப்பா’ என்று

அன்போடு அழைக்கின்றனர். அவர் எங்களை அன்போடு வரவேற்றுச் சிற்றுண்டி வழங்கினூர்.

5. சிற்றுண்டிக்குப் பிறகு நாங்கள் அப்பாவுடன் பள்ளி வகுப்புகளைப் பார்வையிட்டோம்; நூல் நிலையத்தைப் பார்த்தோம்; படிப்பகத்தைப் பார்வையிட்டோம்; பிறகு கைத்தொழிற் சாலையை அடைந்தோம். அங்குக் கைத்தொழில் ஆசிரியராயுள்ள திருவாளர் இராஜவேல் முதலியார் அவர்கள் எங்களுக்கு நெசவுத் தொழில், காகிதம் செய்தல், பொத்தான் செய்தல், ஜாதிக்காய்ப் பலகைகளைக் கொண்டு பல உருவங்களைச் செய்தல், ஈயம் பூசுதல், பாய் பின்னுதல், கொம்புகளைக் கொண்டு பல பொருள்களைச் செய்தல் முதலிய கைத்தொழில்களைக் காட்டினூர். இங்குக் கொம்புத் தொழில் பற்றிக் கூறுகிறேன், கேளுங்கள் :

6. ஒரு மாணவன் எருமைமாட்டுக் கொம்பு ஒன்றை எடுத்தான்; அதில் கொக்கின் உருவத்தைச் சுண்ணும்புக் கட்டியால் வரைந்தான்; வேருெரு மாணவன் படம் வரைந்த பகுதியை மட்டும் வாளால் அறுத்து எடுத்தான்; மற்ருெருவன் உளிகொண்டு உருவத்தைச் செதுக்கினுன்; கரடு முரடான கொக்கின் அமைப்பு ஏற்பட்டது.

7. பிறகு வேருெரு மாணவன் உருவத்தின் நுண்ணிய பாகங்களை அரத்தைக் கொண்டு ராவி எடுத்தான். மற்ருெரு பையன் உருவத்திற்குப் பளப்பளப்பை உண்டாக்க உப்புத்தாளைக் கொண்டு தேய்த்தான்; பிறது அதன்மீது 'பாலிஷ்' பூசினுன். இவ்வாறு எருமைமாட்டுக் கொம்பு சிறிது நேரத்திற்குள் கண்ணைக் கவரும் கொக்காக மாற்றப்பட்டதைக் கண்டு நாங்கள் வியந்தோம். அப்

பிள்ளைகள் செய்துள்ள பறவைகளின் உருவங்களைப் படத்திற் பாருங்கள்.

8. "மாணவர்கள் படிக்கும்போதே இத்தகைய கைத்தொழில்களில் பயிற்சி பெறுதல் நல்லது. கைத் தொழில் ஒன்று தெரிந்திருப்பது கையில் பணம் இருப்பது போன்றது. கைத்தொழில் தெரிந்தவன் எங்கும் பிழைக்க வழியுண்டு. அதனுற்றுன் அப்பா அவர்கள் எங்களுக்குக் கைத்தொழிற் கல்வியும் கற் பிக்கிருர்கள்," என்று ஒரு மாணவன் கூறினுன். நாங்கள் அனைவர்க்கும் நன்றி கூறிச் சென்னை மீண் டோம். உங்கள் பள்ளியில் இத்தகைய தொழிற்கல்வி உண்டா?

அரும்பொருள்

பயில்கின்றனர் - கற்கின்றனர். செவ்வனே - ஒழுங் காய். மாணவர் இல்லம் - மாணவர் உண்டு தங்கிப் படிக் கும் இடம். நுண்ணிய - நுட்பமான. பாலிஷ் - பளபளப்பை உண்டாக்கும் திராவகம். கவரும் - இழுக்கும். வியந்தோம் - ஆச்சரியப்பட்டோம்.

பயிற்சி

I. விடை கூறு :—

1. தொல்காப்பியன் ஆசிரியருடனும் மாணவரு னும் எங்குச் சென்றுன்?

2. மாணவர் இல்லம் யாது?

3. அப் பள்ளியில் கற்பிக்கப்படுவன யாவை?

4. 'அப்பா' என்பவர் யார்? அவர் ஏன் அப்பெயர் பெற்றுர்?

5. கொம்பைக் கொண்டு கொக்குச் செய்வது எப்படி?

6. இத்தொழிற் கல்வியால் நன்மையுண்டா?

7. உங்கள் பள்ளியில் நீங்கள் கற்கும் கைத்தொழில்கள் எவை ?

II. 1. நீ பார்த்த ஒரு கைத்தொழிலைப் பற்றி விவரி.

2. இதனைப் படி :—ஒருவன் நம்மிடம் வரவேண்டுமானால் ' வா ' என்று அழைக்கிறோம் ; அவன் போகவேண்டுமானால் ' போ ' என்கிறோம்.

வந்தான், வருகிறான், வருவான்–இவற்றுக்கெல்லாம் முதல் ' வா ' என்பதுதான். அதிலிருந்தே சொற்கள் பெருகுகின்றன. அது பகுதி என்று சொல்லப்படும்.

நட, நில், கல் (படி), செய், தூங்கு முதலியன பகுதிகள்.

	பகுதி	இ. கா. வினைமுற்று	நி. கா. வினைமுற்று	எ. கா. வினைமுற்று
1.	நட	நடந்தான்	நடக்கிறான்	நடப்பான்
2.	படி	படித்தாள்	படிக்கிறாள்	படிப்பாள்
3.	ஓடு	ஓடினார்	ஓடுகிறார்	ஓடுவார்

(1) அழுதாள், சிரித்தார், வந்தான், கற்றான், ஓடினது, குதித்தன—இவற்றின் பகுதிகளைச் சொல்.

(2) முருகன் வந்தான் என்னுடன் பேசினான் பிறகு தன் வீடு சென்றான்.—அரைப்புள்ளிகளைத் தக்க இடங்களில் இடு.

(3) முருகன் வந்து என்னுடன் பேசி பிறகு தன் வீடு சென்றான்.—காற்புள்ளிகளைத் தக்க இடங்களில் இடு.



7. மதுரைத் தமிழ்ச் சங்கங்கள்

1. 'ஏறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்குமுன் மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்தது ; அதனில் புலவர் பலர் இருந்து தமிழ் நூல்களைச் செய்தனர் ; பல நூல்களைப் பார்வையிட்டு ஆமோதித்தனர். அவர்கள் காலத்து நூல்கள்தாம் சங்க நூல்கள் என்பன. சங்க நூல்கள் தொல்காப்பியம் முதலியன,' என்னும் செய்திகளை நீங்கள் நான்காம் புத்தகத்தில் படித்திருப்பீர்கள்.

2. கி. பி. ஐந்து அல்லது ஆறும் நூற்றுண்டில் மதுரையில் ஒரு சங்கம் இருந்தது. அது சமண சமயத்தைச் சேர்ந்த பெரும் புலவர் பலரைக் கொண்டது. வச்சிரநந்தி என்பவர் சங்கத் தலைவராய் இருந்தார். அப்பொழுது தமிழில் இனியவை நாற்பது, இன்னு நாற்பது முதலிய நீதி நூல்கள் தோன்றின.

3. மேலே சொன்ன சங்கத்திற்குப் பிறகு மதுரையில் ஏறத்தாழ 1500 ஆண்டுகள் சங்கம் ஏற்படவில்லை. நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுரையில் ஒரு சங்கம் தோன்றியது. அது இன்றளவும் இருந்துவருகிறது. 'அதனைத் தோற்றுவித்தவர் யார்? அவர் நோக்கம் என்ன? அச்சங்கம் என்ன செய்துவருகிறது?' என்னும் கேள்விகளுக்கு இங்கு விடை காண்போம்.

4. இப்பொழுது இருக்கின்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தியவர் பாண்டித்துரைத் தேவர் என்பவர். அவர் இராமநாதபுரம் அரசர்க்கு உறவினர்; பாலவநத்தம் சமீந்தார். அவர் சிறந்த தமிழ்ப் புலவர். அவர் புலவர் பலரை ஆதரித்து வந்தார். அப்பெரியார் தமிழ் வகுப்புக்களை வைத்துத் தமிழ் பரப்பவும், தமிழ் நூல்களை அச்சிடவும், தமிழாராய்ச்சி செய்யவும் 1901-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14-ஆம் நாள் மதுரையில் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தினர். அன்று தமிழ்ப்பெரும் புலவர் பலர் மதுரையில் கூடினர்; இராமநாதபுரம் அரசர் முன்னிலையில் சங்கத் திறப்பு விழா நடந்தது.

5. சேதுபதி செந்தமிழ்க் கல்லூரி, பாண்டியன் நூல் நிலையம், நூலாராய்ச்சியகம் என்பன சங்கத்தின் பகுதிகள். செந்தமிழ்க் கல்லூரியில் பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் என்னும் மூன்று வகுப்புகள் ஏற்பட்டன. பெரும் புலவர்கள் ஆசிரியர்களாய் அமர்ந்தனர். தேவர் அவைப் புலவரான திரு. நாராயண ஐயங்கார் தலைமை ஆசிரியரானர். நூலாராய்ச்சியகத்திற்குச் சேது சம்ஸ்தானப் பெரும் புலவரான ரா. இராகவையங்கார் தலைவரானர். இராமநாதபுர

அரசரும் தேவரும் நூல் நிலையத்திற்குப் பல நூல்களை உதவினர். தேவர் தமது பெரிய மாளிகையையே சங்கத்துக்காக உதவினர்.

6. 1903-ஆம் ஆண்டில் செந்தமிழ் என்னும் திங்கள் தாள் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவரலாயிற்று. அது இன்றளவும் நடந்துவருகிறது. அத்தாளில் பேரறிஞர் பலர் அரிய கட்டுரைகளை எழுதலாயினர்; தமிழ் வகுப்புக்களில் பலர் சேர்ந்து படிக்கலாயினர்; இன்றும் படித்துவருகின்றனர். தமிழ் அகராதி உள்படப் பல நூல்கள் சங்கத்தில் அச்சிடப்பட்டன. சங்கத்திற்கு என்று ஓர் அச்சகமும் ஏற்பட்டது.

7. பாண்டித்துரைத் தேவர் தமது முயற்சியின் பலனைக் காண நெடுநாள் வாழவில்லை. அவர் 1911-ஆம் ஆண்டு டிசம்பரில் காலமானார். ஆனால் அப்பெரியவர் ஏற்படுத்திய தமிழ்ச்சங்கம் இன்றளவும் நாட்டில் தமிழ்த்தொண்டு செய்துவருகின்றது. பாண்டித்துரைத் தேவர் தமது அரிய திருப்பணியால் தமிழ்த் தாயின் தவப்புதல்வரானார். அவர் திருப்பெயர் வாழ்க!

அரும்பொருள்

ஆமோதித்தனர் - ஏற்றுக்கொண்டனர். சமணம் - ஜைனம். சமயம் - மதம். தோற்றுவித்தவர் - உண்டாக்கியவர். தேவர் - மறவர் குலப் பட்டப்பெயர் மறவர் - வீரர். சேதுபதி - இராமநாதபுரம் அரசர். செந்தமிழ் - செம்மைப் படுத்தப்பட்ட தமிழ். திருப்பணி - நல்ல தொண்டு.

பயிற்சி

I. விடை கூறு :—

1. மதுரையில் பழைய சங்கம் எப்பொழுது இருந்தது ?

2. எவை ‘சங்க நூல்கள்’ எனப்படும் ? ஏன் ?

3. இடையில் எப்பொழுது சங்கம் ஏற்பட்டது? அதன் தலைவர் யார்?

4. அச்சங்கத்தில் செய்யப்பட்ட நூல்கள் எவை?

5. இன்றுள்ள சங்கம் எப்பொழுது—யாரால்—தோற்றுவிக்கப்பட்டது?

6. சங்கத்தின் பிரிவுகள் எவை? அவற்றைப் பார்த்து வந்தவர் யாவர்?

7. பாண்டித்துரைத் தேவர் தமிழுக்குச் செய்த தொண்டு யாது?

II. நூற்றாண்டு = நூறு + ஆண்டு
வயிற்றுவலி = வயிறு + வலி

சங்கத்தலைவர், தமிழ்ச்சங்கம், இன்றளவும், திருப்பணி—இவற்றைப் பிரித்து காட்டு.

III. செய்தான் = செய் + த் + ஆன்—இதில் 'செய்' என்பது தொழிலை உணர்த்துகிறது. அது பகுதி எனப்படும். 'ஆன்' என்பது தொழில் செய்தவன் ஆடவன் (ஆண்பால்) என்பதை உணர்த்துகிறது. அது சொல்லின் கடைசியில் இருப்பதால் விகுதி எனப்படும். 'செய்தான்' என்பது இறந்தகால வினைமுற்று. அந்தக் காலத்தை உணர்த்துவது எது? பகுதிக்கும் விகுதிக்கும் நடுவில் உள்ள த் என்பதே இறந்த காலத்தை உணர்த்துகிறது.

'த்' என்பது பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிலைத்திருப்பதால் இடைநிலை எனப்படும்.

செய்	+	த்	+	ஆன்
↓		↓		↓
பகுதி		இ. கா. இடைநிலை		விகுதி

வினைச்சொல்லில் (1) பகுதி வினையையும், (2) இடைநிலை காலத்தையும், (3) விகுதி வினை செய்பவரையும் உணர்த்தும்.

இருந்தது, பாடினர், உதவினர்—இவற்றைப் பிரித்துப் பகுதி, விகுதி, இடைநிலை கூறு.

8. பத்திரிகைச் செய்திகள்

1. பத்திரிகை அல்லது செய்தித்தாள் என்பது உலகச் செய்திகளை வெளியிடும் தாள் ஆகும். நாள் தாள்கள், வாரத் தாள்கள், மாதத் தாள்கள் எனப் பலவகைச் செய்தித்தாள்கள் இருக்கின்றன. நாள் தாள்கள் நாள்தோறும் உலகில் நடைபெறும் செய்திகளைக் கூறுவன. அவற்றில் பல நாடுகளைப் பற்றிய பல செய்திகள் வெளிவருகின்றன; பயிர்த்தொழில், கைத்தொழில், வாணிகம், அரசியல் பற்றிய செய்திகளும் பல்வேறு நிகழ்ச்சிகளும் குறிக்கப்படுகின்றன. நீ அவற்றைப் படிப்பதால், ஒவ்வொருநாளும் உலகில் நடைபெறும் செய்திகளை அறிந்து கொள்ளலாம்; சிறந்த செய்திகளைக் கத்தரித்துச் செய்திகள் திரட்டும் உனது நோட்டுப் புத்தகத்தில் ஒட்டிவைக்கலாம்; இவற்றை இடமறிந்து கட்டுரைகளிற் பயன்படுத்தலாம்.

2. இங்கு மாதிரியாகச் சில பத்திரிகைச் செய்திகள் தரப்படுகின்றன. நீ இவை போன்றவற்றைக் கவனித்துப் பயன்படுத்திக்கொள்.

1. சமூகசேவைப் பயிற்சிப்பள்ளி

சென்னையில் 1950-இல் சமூக சேவைப் பயிற்சிப்பள்ளி ஒன்று ஏற்படுத்தப்படும். பயிற்சி இரண்டு ஆண்டுகள் தரப்படும். தொழிலாளர் சமூகத்தொண்டு, மருத்துவ சுகாதாரத் தொண்டு, கைத்தொழில் தொண்டு, சமூகத்தொண்டு முதலிய துறைகளில் மாணவர்க்குப் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி பெற்று வெளிவருபவர்க்கு அரசாங்கத் தொழில் நிலையங்களிலும் கிராமச் சீரமைப்பு நிலையங்களிலும் தொழிற் பள்ளிகளிலும் இவை போன்ற பிறவற்றிலும் வேலையில் அமர்த்தும் சலுகை காட்டப்படும்.

—தினசரி, 25—10—'49.

2. காஞ்சியில் கல்லூரி

காஞ்சிப் பெருமக்களின் அரிய முயற்சி

காஞ்சியில் ஒரு கல்லூரியை ஏற்படுத்த நகர மக்கள் முனைகின்றனர்; 50 ஏகர் நிலத்தை வழங்க ஒருவர் இசைகின்றூர்; கந்தசாமி முதலியார் என்பவர் ஐம்பதினுயிரம், ரூபாய் தந்திருக்கிறூர். நாம் இதனை மனமாரப் பாராட்டுகிறோம். "அன்ன சத்திரம் ஆயிரம் கட்டுதலைவிட ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியம்" என்று பாரதியார் கூறியதை நினைவூட்டுகிறோம். காஞ்சியைப்போன்ற பிற நகரங்களிலும் இத்தகைய கல்லூரிகள் தோன்ற வேண்டும். அந்தந்த நகரப் பொதுமக்கள் இம்

முயற்சியில் ஈடுபடுமாறு வேண்டுகிறோம். செல்வர் மனம் வைத்தால் இம்முயற்சி எளிதில் நடைபெறலாம். —மாலைமணி, 25—10—'49.

3. விரதம் இருப்பதன் சிறப்பு

"உடலை நோய் இல்லாமல் வைத்துக்கொள்வது தான் விரதத்தின் கருத்து. விரதம் நோயை அறவே ஒழிக்கும். விரதத்தினால் மலச்சிக்கல் ஒழியும்; நரம்புகள் உரம் பெறும்; வலிமை ஓங்கும்; தீய விஷங்கள் இறங்கும். வாரத்திற்கு ஒரு நாள், திங்களுக்கு ஒருநாள், ஆண்டில் ஆறுநாள் விரதம் இருப்பது நல்லது. சோறு உண்பதில்லை என்று சிற்றுண்டிகளால் வயிற்றை நிரப்புவது விரதம் ஆகாது. விரதத்தினால் அறிவு விளக்கமடையும். இளம் பிள்ளைகள் விரதம் இருந்தால் நீண்டநாள் உடல் நலத்துடன் வாழலாம்," என்று தமிழ்ப் பெரியார் திரு. வி. க. பழநியாண்டவர் கோவில் விழாச் சொற்பொழிவில் குறிப்பிட்டார்.

—சுதேசமித்திரன், 25—10—'49.

அரும்பொருள்

கல்லூரி - காலேஜ். இசைகின்றனர் - சம்மதிக்கின்றனர் ஈடுபடுதல் - கலந்துகொள்ளுதல். உரம் - பலம். விளக்கம் - தெளிவு. ஆண்டு - வருஷம்.

பயிற்சி

I. விடை கூறு :—

1. செய்தித்தாள்களைப் படிப்பதால் உண்டாகும் நன்மை என்ன ?

2. இங்குத் தரப்பட்டுள்ள மூன்று பத்திரிகைச் செய்திகளால் நீ அடையும் நன்மை என்ன ?

3. முதற் செய்தி எதனைத் தெரிவிக்கிறது ?

4. 'காஞ்சியில் கல்லூரி' என்னும் தலைப்புடைய செய்தி உனக்கு எவ்வாறு நன்மையைத் தரும் ?

5. விரதம் இருப்பதால் உண்டாடம் நலன்கள் யாவை ?

II. 1. மாதிரி, செய்தித்தாள், கல்லூரி, சமூகம் சலுகை, உரம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. கயிறு+ஐ, வயிறு+ஐ, மரம்+கு, வாரம்+கு— இவற்றைச் சேர்த்துக் கூறு.

3. கிராமச் சீரமைப்பு, உண்பதில்லை, விளக்கமடையும், தமிழ்ப்பெரியார், சமூகத்தொண்டு—பிரித்துக் காட்டு.

III. (1) தின் (தின்னு)—இந்த வினையின் அடியாகப் பிறக்கும் பெயர்ச்சொல் தீனி.

(2) படி—இந்த வினையின் அடியாகப் பிறக்கும் பெயர்ச்சொல் படிப்பு.

சாப்பாடு, விளையாடு, உண், காண்—இவற்றின் அடியாகப் பிறக்கும் பெயர்ச்சொற்களைக் கூறு.

IV.

செய்தான்	=செய்	+த்	+ஆன்—	இறந்தகாலம்
உண்டான்	=உண்	+ட்	+ஆன்—	,,
கற்றான்	=கல்	+ற்	+ஆன்—	,,
போயினான்	=போ	+இன்	+ஆன்—	,,
போனான்	=போ	+ன்	+ஆன்—	,,

த், ட், ற், இன், ன்—இறந்தகால இடைநிலைகள்.

1. பெய்தது, தூங்கினான், கண்டேன், விற்றான்— இவற்றில் உள்ள இறந்தகால இடைநிலைகளைக் காட்டு.

2. கண்ணன் வந்தான் கண்ணன் என்னுடன் பேசினான் கண்ணன் பிறகு தன் வீடு சென்றான்—தக்க இடங்களில் முற்றுப்புள்ளி இடு.

9. உவமைகள்

1. 'தன் காற்சிலம்பை விற்கச் சென்ற கோவலன்' அரசியின் காற்சிலம்பைத் திருடிய கள்வன் என்று கருதி அரசனால் கொல்லப்பட்டான் என்பதைக் கண்ணகி கேள்விப்பட்டாள்; உடனே அடியற்ற பனை போலக் கீழே வீழ்ந்து மயக்க முற்றாள்.'

2. 'கந்தசாமியார் சிறந்த இலக்கணப் புலவர். ஆனால் மக்கள் அவரினும் குறைந்த புலமை உடையவர்களைப் பெரும்புலவர்களாய்க் கருதினார்கள். பின்னவர் தம்மை விளம்பரப்படுத்திக் கொண்டமையும் முன்னவர் தம்மை விளம்பரப்படுத்திக்கொள்ளாமையுமே அதற்குக் காரணம் ஆகும். இதனால் கந்தசாமியாரது புகழ் குடத்துள் விளக்குப் போல மங்கியிருந்தது.'

3. 'தந்தையார் இறந்து கிடக்கின்றார்; அனைவரும் அழுது புலம்புகின்றனர். அச்சமயத்தில் மூத்த மகனிடம் இளைய மகன் வந்து, "பாகத்தைப் பிரித்துவிட்டு மறுவேலையைப் பார்" என்று கூறிப் பிடிவாதம் செய்வது—வெந்த புண்ணில் வேல் நுழைவது போல இருக்கிறது.'

4. 'முருகன் பணப்பேயான பரந்தாமனிடம் வட்டிக்குக் கடன் வாங்கினான். பரந்தாமன் தாராளமாய்க் கடன் கொடுத்தான்; முருகனும் பின்யோசனை இல்லாமல் தாராளமாய்க் கடன் வாங்கினான். இப்பொழுது அக்கடனை அடைக்க முடியாமல் அவதிப்படுகிறான். பரந்தாமன் இரக்கம் இன்றி அவனை நெருக்குகிறான். பாவம்! முருகன் பாம்பின் வாய்த் தேரை போலத் துடிக்கிறான்.'

5. மேற்சொன்ன நான்கு செய்திகளிலும்

நான்கு உவமைகள் வந்துள்ளன. தெரியாத ஒன்றை விளக்க உதவியாக வரும் ஒன்றே உவமை என்பது. மேல்பகுதிகளில்—'அடியற்ற மரம் போல,' 'குடத்துள் விளக்குப் போல,' 'வெந்த புண்ணில் வேல் நுழைவது போல,' 'பாம்பின் வாய்த் தேரை போல' என்பவை அவ்வச் செய்திகளை நன்ருய்த் தெளிவாக்க ஆளப்பட்ட உவமைகள் ஆகும்.

6. உவமைகள் நாம் கூறும் செய்திகளைத் தெளிவுபடுத்த வல்லவை. ஆதலின் இவை நீண்ட காலமாய்ப் புலவர்களாலும் பொதுமக்களாலும் வழங்கப்பட்டுவருகின்றன. பழமொழிகள், இரட்டைச் சொற்கள் இவற்றை ஆளுதல் போலவே இவற்றையும் இடறிந்து கட்டுரைகளில் அமைத்து எழுதுதல் கட்டுரையை அழகு செய்யும். நீ இத்தகைய உவமைகளை நூல்களிலிருந்தும் பொதுமக்கள் பேச்சுக்களிலிருந்தும் தொகுக்கவேண்டும். இங்குச் சில உவமைகள் தரப்படுகின்றன. அவற்றைப் பொருள் அறிந்து மனப்பாடம் செய்துகொள்.

1. அச்சில்லாத தேர் போல
2. அணை கடந்த வெள்ளம் போல
3. அத்தி பூத்தாற் போல
4. அம்பு பட்ட மயில் போல
5. ஆலையில் அகப்பட்ட கரும்பு போல
6. ஆகாயத்திற் கோட்டை கட்டினுற்போல
7. இஞ்சி தின்ற குரங்கு போல
8. இருதலைக் கொள்ளி எறும்பு போல
9. இலவு காத்த கிளி போல
10. உடும்புப் பிடி போல
11. எலியும் பூனையும் போல
12. உயிரும் உடலும் போல

அரும்பொருள்

புலமை - அறிவு. விளம்பரம் - பலர் அறியச் செய்தல். தேரை - தவளை இனத்தைச் சேர்ந்த ஒருயிர். தொகுத்தல் - சேர்த்தல்.

பயிற்சி

I. விடை கூறு :—

1. கண்ணகி எதைப்போல வீழ்ந்து மயக்கமுற்றாள் ?
2. கந்தசாமியார் புகழ் எதைப்போல மங்கியிருந்தது?
3. தம்பி தமயனைப் பங்கு பிரிக்கும்படி சொன்னது எதைப்போல இருந்தது ?
4. முருகன் நிலைமை எதனை ஒத்து இருந்தது ?
5. உவமை என்பது யாது ?
6. உவமைகளைப் படிப்பதனால் பயன் என்ன ?

II. 1. உன் தகப்பனாரைக் கேட்டு மூன்று உவமைகளை எழுதிக் கொண்டுவா.

2. மங்கி, பின்யோசனை, முன்னவர், தாராளம்— எதிர்ச் சொற்களைச் சொல்.

3. முதல் பத்தியில் உள்ள எ. ப. செ. கூறு.

III. 1. செய்கிறான்=செய்+கிறு+ஆன்—நிகழ்காலம்
செய்கின்றான்=செய்+கின்று+ஆன்—,,
செய்யாநின்றான்=செய்+ஆநின்று+ஆன் ,,

கிறு, கின்று, ஆநின்று—நிகழ்கால இடை நிலைகள்.

8-ஆம் பாடத்தில் உள்ள நிகழ்கால வினைமுற்றுக்களை எழுது; அவற்றில் உள்ள நி. கா. இடைநிலைகளைக் கூறு.

2. (1) அவை பின் வருவன :
(2) அண்ணன் : கண்ணா, காலையில் எங்குப் போனாய் ?

இத்தகைய இடங்களில் வரும் இரண்டு புள்ளிகள் முக்காற்புள்ளி (கோலன்) எனப்படும். உரையாடலில் இக்குறி மிகுதியாக வரும். கடைசிப் பாடத்தைப் பார்த்து இக்குறி வந்துள்ள இடங்களைக் கவனி.

10. ஒற்றுமையாக உழைப்போம்

1. ஒற்றுமை யாக உழைத்திடு வோம்நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம் ;
வெற்றுரை பேசித் திரியவேண் டாஇன்னும்
வீணாய்ப் புராணம் விரிக்கவேண்டா.

2. கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட் டுச்சாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டு,
'பாரதத் தாய்பெற்ற மக்களே'ன் றுநிதம்
பல்லவி பாடிப் பயனெதுவோ ?

3. மானமே வாழ்வின் உயர்நிலை யாம்அதை
மாசுறச் செய்தல் கொடுங்கொலையாம் ;
ஈன சாதிஎனும் பேச்சினைப் போல்நெஞ்சை
ஈர்ந்திடும் வாளொன்று வேறுளதோ ?

4. மன்னுயிர்க் காக முயல்பவ ரேஇந்த
மாநிலத் தோங்கும் குலத்தினராம்;
தம்முயிர் போற்றித் திரிபவ ரேஎன்றும்
தாழ்ந்த குலத்திற் பிறந்தோரம்மா!

—தேசிக விநாயகம் பிள்ளை

அரும்பொருள்

உள்ள - பொருந்திய. வெற்றுரை - வீண் பேச்சு. புராணம் - பழங்கதை. பல்லவி - திரும்பத் திரும்ப ஒன்றையே சொல்லுதல். ஈன - தாழ்ந்த. ஈர்ந்திடும் - அறுக்கும். மன் - நிலைபெற்ற. ஓங்கு - உயர்ந்த. போற்றி - சுயநலத்துடன் பாதுகாத்து.

பயிற்சி

I. விடை கூறு:—

1. புராணம் - பொருள் என்ன?
2. எந்தப் பல்லவி பாடிப் பயன் இல்லை?
3. உயிர் நிலை - எது? கொடுங்கோல் எது? நெஞ்சை ஈர்ந்திடும் வாள்—எது?
4. ஓங்கு குலத்தவர் யாவர்?
5. தாழ்ந்த குலத்தவர் யாவர்?
6. நீ இப்பாடலால் அறியும் நீதி யாது?

II. தன்+உயிர்=தன்+(ன்)+உயிர்=தன்னுயிர்
மன்+உயிர்=மன்+(ன்)+உயிர்=மன்னுயிர்

மண்ணடி, நல்லரசன், கண்ணடி, மெய்யன்பு, பொய்யுரை—இவற்றைப் பிரி.

III. நிற்பான்=நில்+ப்+ஆன்—எதிர்காலம்
செய்வான்=செய்+வ்+ஆன்— ,,
ப், வ்—எதிர்கால இடைநிலைகள்.

வருவார், பார்ப்பார், நிற்பார், செய்வாள்—எதிர்கால இடைநிலைகளைக் குறி.

11. மணிமேகலை

1. நீ கோவலனைப்பற்றிச் சென்ற வகுப்பில் படித்தாய். அவன் வரலாறு கூறும் நூல் சிலப்பதி காரம் என்பது. அவனுக்கும் மாதவி என்னும் நடன மகளுக்கும் பிறந்தவள் மணிமேகலை என்பவள்.

2. கோவலன் மதுரையில் கொலையுண்டான். அல்லவா ? அதன் பிறகு மாதவி வாழ்க்கையை வெறுத்துப் பௌத்த சமயத்தைச் சேர்ந்தாள். மணி மேகலா தெய்வத்தின் அருளால் மணிமேகலை பல இடங்களுக்குச் சென்றாள்; உருமாறவும் முன் பிறப்பை அறியவும் வானத்திற் பறந்து செல்லவும் அறிந்தாள்.

3. அவள் ஏழைகளிடமும் பிற உயிர்களிடமும் இரக்கம் கொண்டவள். தெய்வ அருளால், எடுக்க எடுக்கச் சோறு வற்றாத அமுத சுரபி என்னும் பாத்திரம் ஒன்று அவள் கைக்கு வந்தது. அவள் அதைக் கொண்டு பறவை முதலிய உயிர்களுக்கும் காணார், கேளார், முடவர் முதலியோர்க்கும் அன்ன தானம் செய்துவந்தாள்; பஞ்சம் தோன்றிய இடங் களுக்குப் பறந்து சென்று பஞ்சக் கொடுமையை நீக்கினாள்.

4. உதயகுமரன் என்பவன் சோழ அரசன் மகன். அவன் மணிமேகலையின் தவ ஒழுக்கத்தை அறியவில்லை; அவளை நாடகமகள் என்றே கருதி னான். அதனால் அவன் அவளை அடைய விரும் பினான். மணிமேகலை அவனிடமிருந்து தப்ப எண்ணி, வேறொரு பெண்ணாக உருமாறினாள். அப் பெண்ணின் கணவன் மணிமேகலையைத் தன் மனைவி என்றே நம்பினான்.

5. அதனால் அக்கணவன் மணிமேகலையை நெருங்கிப் பேச முயன்றான். அவள் அவனைப் பொருட்படுத்தாமல் இருந்தாள். அதனால் அக் கணவன் கோபம் கொண்டான். அதே சமயத்தில் உதயகுமரன் அங்கு வந்து மணிமேகலையிடம் பேசினான். மணிமேகலை அவனுக்கு அறிவுரை கூறினாள். உண்மை உணராத புதிய மனிதன், தன் மனைவியே தன்னிடம் பேசாமல், வேறு ஒருவனிடம் பேசுவதாய் எண்ணினான். அவனுக்கு உண்டான கோபத்திற்கு அளவில்லை. அவன் அன்றிரவு உதய குமரனைத் தன் வாளால் கொன்றான்.

6. மணிமேகலை வஞ்சி மாநகரம் சென்றாள்; செங்குட்டுவனால் கட்டப்பட்ட கண்ணகியின் கோவிலை அடைந்தாள்; பத்தினிக் கடவுளைப் பணிந் தாள்; துறவு பெற்ற தன் பாட்டனை வஞ்சியிற் கண்டாள்; சைவம்—வைணவம் முதலிய சமயங் களில் வல்ல அறிஞரைக் கண்டு, அவரவர் சமயக் கொள்கைகளைக் கேட்டு அறிந்தாள்; இறுதியில் அறவண அடிகள் என்ற பௌத்த குருவிடம் உபதேசம் பெற்றாள்.

7. இத்தவமகளது வரலாறு கூறும் நூல் மணி மேகலை என்பது. இதனைச் செய்யுள் வடிவத்திற் பாடியவர் சாத்தனார் என்பவர். அவர் மதுரையில் தானியக்கடை வைத்திருந்தவர்; அதனால் கூல வாணிகர் எனப்பட்டார். சிலப்பதிகாரத்தைப் போலவே மணிமேகலையும் சிறந்த தமிழ் நூல். நீங்கள் மேல் வகுப்புக்களில் அந்நூலைப்பற்றி மிகுதியாக அறியலாம்.

அரும்பொருள்

சிலப்பதிகாரம் - சிலம்பு பற்றிய வரலாறு. மணி மேகலா தெய்வம் - பௌத்த நூல்களில் கூறப்படும் பெண் தெய்வம். கேளார் - செவிடர். காணார் - குருடர். தவ ஒழுக்கம் - துறவு ஒழுக்கம். பொருட்படுத்தாமல் - மதியாமல். பத்தினிக் கடவுள் - கண்ணகித் தெய்வம். அடிகள் - துறவி. அறிவுரை - புத்திமதி.

பயிற்சி

I. விடை கூறு :—

1. மணிமேகலை என்பவள் யார் ?
2. அவள் எவற்றை அறிந்தவள் ?
3. அவள் பெற்ற பாத்திரத்தின் சிறப்பு யாது ?
4. அவள் எதைக் கொண்டு என்ன செய்தாள் ?
5. உதயகுமரன் யாவன் ? அவன் ஏன் கொலையுண்டான் ?
6. மணிமேகலை வஞ்சியில் யாரைக் கண்டாள் ? யாரைப் பணிந்தாள் ?
7. அறவண அடிகள்—யாவர் ?
8. சாத்தனார் யார் ? அவர் செய்த நூல் யாது ?

II. 1.

பகுதி	வினைமுற்று	வினையெச்சம்	பெயரெச்சம்
வெறு	வெறுத்தாள்	வெறுத்து	வெறுத்த
பெறு	பெற்றாள்	பெற்று	பெற்ற

இவ்வாறு கீழ் வரும் சொற்களுக்கும் கூறு :—பற, மாறு, நட, நீக்கு, கொல், கேள்.

2. பஞ்சம்+கொடுமை, நடுங்கி+பேசு, பொருள் +படுத்து, அளவு+இல்லை—இவற்றைச் சேர்த்துப் படி.

3. அரம் - ஒரு கருவி. அறம் - தருமம்.
பரவை - கடல் பறவை - பக்ஷி.

இவ்வாறு, ர, ற வரும் சொற்களை இப்பாடத்திலும் முன் பாடங்களிலும் இருந்து எடுத்து எழுதிப் பொருளையும் எழுது.



12. விற்பனை அறிவு

(ஒரு சொற்பொழிவு)

1. பொருள்களை உண்டாக்குதல் உழைப்பு மிகுந்த வேலை. ஆனால் அவற்றை விற்பனை செய்தல், உண்டாக்குதலைப் போலவே கடினமானது. பலர் இதனை எளிதாக நினைப்பர். அவ்வாறு நினைத்தல் தவறு.

2. செம்பாக்கம் கிராமத்தில் வீரபத்திர முதலியார் என்பவர் காய்கறித் தோட்டம் வைத்திருப்பவர். அவர் வண்டிகளில் காய்கறிகளை ஏற்றிப் பல ஊர்களுக்கு அனுப்பி, நல்ல வருமானம் பெறுகின்றார். அவர் ஒரு நாள் சென்னைப்பள்ளி ஒன்றில் ‘விற்பனை அறிவு’ என்பதைப்பற்றிச் சொற்பொழிவு ஆற்றினர். அவர் பேச்சில் முக்கியமான பகுதிகள் கீழே தரப்படுகின்றன :

3. “தோட்டக்காரர் பின் வருவனவற்றைக் கவனிக்கவேண்டும். (1) காய்கறிகளுக்கு எந்தப்

பருவத்தில் விற்பனை மதிப்பு ஏற்படுமோ அப்பருவத்தில் அவற்றைப் பறிக்கும்படியாக விளைக்கவேண்டும். (2) காய்கள் கெடாமல் இருக்க மிக்க கவனத்தைக் கையாள வேண்டும். (3) வாங்குவோர் அவற்றை எளிதில் எடுத்துச் செல்லும்படி விற்பவர் வசதிகளை அமைத்துத் தரவேண்டும்; அவ்வாறு செய்தால் விற்பனை மிகுதியாகும். (4) போட்டி இல்லாத சந்தைகளைத் தேடி அங்குக் காய்கறிகளை விற்க வேண்டும். (5) விற்பனையில் வாங்குவோரை ஏமாற்றாமல் ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டும். வாங்குவோரிடம் மலர்ந்த முகத்தைக் காட்டி இனிமையாய்ப் பேச வேண்டும்; அவர்களை நம்மைப் போலக் கருத வேண்டும்.

4. "விற்பனையில் பலவகை உண்டு; சில்லறையாக விற்பது ஒரு முறை; சில்லறை வாணிகர்க்கு மொத்தமாக விற்பது ஒரு முறை; தரகர்க்கு விற்பது ஒரு முறை.

5. "சில்லறை வாணிகர் கீழ்வருவனவற்றை நினைவிற் கொள்ளவேண்டும்: (1) பலர் வந்து போகும் வசதியுள்ள இடத்தில் கடை வைக்க வேண்டும்; (2) அந்த இடம் ஈ முதலியவை அண்டாத தூய இடமாக இருத்தல் வேண்டும்; (3) விற்பவர் தூய ஆடைகளுடன் விளங்க வேண்டும்; (4) நாள்தோறும் கடை வைத்திருக்க வேண்டும்; அப்பொழுதுதான் வாங்குவோர்க்கு நம்பிக்கை ஏற்படும். (5) வாங்குவோரிடம் மரியாதையாய் நடந்துகொள்ள வேண்டும்.

6. "சில்லறை வாணிகர்க்கு மொத்தமாய் விற்பவர் பின்வருவனவற்றைக் கவனிக்க வேண்டும்: (1) ஓர் ஊரில் அல்லது ஒரு சந்தையில் ஒரு

வாணிகர்க்கே பொருள்களை அனுப்ப வேண்டும். பலருக்கு அனுப்பினால் வாணிகத்தில் போட்டி ஏற்படும்; போட்டியால் பொருள் விலை குறையும்; அக்குறைவு தோட்டக்காரரைத் தாக்கும். (2) சில சந்தைகளில் உயர்ந்த வகைப் பொருள்கள் தேவைப் படும்; சிலவற்றில் மட்டவகைப் பொருள்கள் தேவைப் படும். இவற்றை உணர்ந்து அவ்வச் சந்தைக்கு ஏற்ற வகைப் பொருள்களை அனுப்பவேண்டும். ஒரே பொருளில் இரு வகைகளை ஒரே சந்தைக்கு அனுப்பக் கூடாது; அனுப்பினால் இரண்டில் ஒருவகை விற்பனை யாகாமல் கெட்டுவிடும். (3) 'இந்தக் கடையில் நாள்தோறும் இந்தப் பொருள்கள் கிடைக்கும்' என்னும் எண்ணத்தை வாங்குவோர்க்கு ஊட்ட வேண்டும். அதனால் தோட்டக்காரர் வாணிகர்க்குத் தவணை தவறாமல் காய்கறிகளை அனுப்ப வேண்டும். (4) சந்தையின் தேவைக்குத் தக்கபடி காய்கறிகளை அனுப்ப வேண்டும்.

7. "தரகர் தாம் விற்றுத் தருவதாகக் கூறிக் குறைந்த விலை பேசிக் காய்கறிகளை வாங்கிக் கொள்வர்; அவற்றை மிகுந்த விலைக்கு விற்று மிகுந்த லாபத்தைப் பெறுவர். இந்த முறையால் தோட்டக் காரர்க்கு லாபம் இல்லை; சில்லறை வாணிகர்க்குப் பிழைப்பில்லை; இந்த இருவரும் பெற வேண்டும் லாபத்தைத் தரகர் பெறுவர்.

8. "இம்மூவகை முறைகளைவிடக் கூட்டுறவு முறையில் விற்பது சிறந்தது. பலர் சேர்ந்து செய்வ தால் செலவு குறையும்; லாபம் மிகுதிப்படும்; விற்பனையில் ஒழுங்கு நிலைபெறும்; பொருள்கள் மிகுதியாய்க் கிடைக்கும்; கூட்டுறவுச் சங்கத்தார் யோசனைகளும் உதவியும் அவ்வப்போது கிடைக்கும்.

பொருள் விற்பனையில் இத்தனை நுட்பங்கள் இருக்கின்றன. இவற்றை அறிந்திருத்தலே 'விற்பனை அறிவு' எனப்படும்.''

அரும்பொருள்

சொற்பொழிவு - பிரசங்கம். ஆற்றினர் - செய்தார். தரகர் - நடுவர், நடுவில் இருப்பவர். அண்டாத - நெருங்காத. வாணிகர் - வியாபாரி.

பயிற்சி

I. விடை கூறு :—

1. வீரபத்திர முதலியார் யார் ?
2. தோட்டக்காரர் கவனிக்க வேண்டுவன யாவை ?
3. மூவகை விற்பனை முறைகள் எவை ?
4. சில்லறை வாணிகர் கவனிக்க வேண்டுவன யாவை ?
5. அவர்களுக்கு மொத்தமாக விற்பவர் கவனிக்கத் தக்கவை எவை ?
6. தரகர் முறை நல்லதா ?
7. இம்மூவகை முறைகளைவிடச் சிறந்தது எது? எப்படி ?

II. லாபம், மொத்தம், பலர், நம்பிக்கை, விற்பவர், இல்லாத, மிகுதி, மட்டம், குறைவு—இவற்றுக்குரிய எதிர்ச் சொற்களைக் கூறு.

III. வினைமுற்று விகுதிகள் :—

(1) செய்தான்=செய்+த்+ஆன்—ஆண்பால் விகுதி
(2) செய்தாள்=செய்+த்+ஆள்—பெண்பால் விகுதி
(3) செய்தார் =செய்+த்+ஆர்—பலர் பால் விகுதி
(4) செய்தது =செய்+த்+து—ஒன்றன் பால் விகுதி
(5) செய்தன =செய்+த்+அ—பலவின் பால் விகுதி

நடந்தார், தேடினாள், வந்தான், போயிற்று, ஆடின— ஐம்பால் விகுதிகளைச் சுட்டிக் காட்டு.

13. சிற்றூரும் பட்டணமும்

1. சேரிக்குப் பெரிது சிற்றூர் ;
தென்னைமா சூழ்ந்தி ருக்கும் ;
தேர்ஒன்று கோயில் ஒன்று
சேர்ந்தஓர் வீதி, ஓட்டுக்
கூரைகள், கூண்டு வண்டி,
கொட்டில்சேர் வீதி ஐந்தே ;
ஊர்இது ; நாட்டார்க் கெல்லாம்
உயிர்தரும் உணவின் ஊற்று.

2. இயற்கையின் உயிர்கட் குள்ளே
மனிதன்தான் எவற்றி னுக்கும்
உயர்ச்சியும், தான்அ றிந்த
உண்மையை உலகுக் காக்கும்
முயற்சியும் இடைவி டாமல்
முன்னேற்றச் செயலைச் செய்யும்
பயிற்சியும் உடையான் என்று
பட்டணம் எடுத்துக் காட்டும்.

3. இயற்கையின் எழிலை எல்லாம்
சிற்றூரில் காண லாகும் ;
செயற்கையின் அழகை எல்லாம்
பட்டணம் தெரியக் காட்டும் ;
முயற்சியும் முழுது ழைப்பும்
சிற்றூரில் காணு கின்றேன் ;
பயிற்சியும் கலையு ணர்வும்
பட்டணத் திற்பார்க் கின்றேன்.

—பாரதிதாசன்

அரும்பொருள்

1. கொட்டில் - மாட்டுக் கொட்டகை. நாட்டார் - நாட்டு மக்கள். உணவின் ஊற்று - கிராமமே நாட்டு மக்களுக்கு உணவுப் பொருள்களைப் பயிர் செய்து தருவது.

2. பட்டணத்து மக்கள் படிப்பிலும் உத்தியோகத்திலும் வாணிகத்திலும் ஈடுபட்டவர்கள்; புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டவர்கள் என்பது கருத்து. இடைவிடாமல் - தொடர்ந்து.

3. எழில் - அழகு. செயற்கை - மனிதன் உண்டாக்கியவை. இயற்கை - தாமே தோன்றியவை. பயிற்சி - பழகுதல். கலை - பலவகைச் சாத்திரங்கள். உணர்வு - அறிவு.

பயிற்சி

I. 1. இப்பாக்களின் பொருளை உன் சொந்த வாக்கியங்களில் எழுது.

2. சிற்றூர், ஓட்டுக் கூரை, உயிர்கட்குள், முன்னேற்றம், தெரியக்காட்டும்—இவற்றைப் பிரி.

II. 1. (1) படி - பகுதி, (2) ஆண்பால், (3) நிகழ்காலம். இம்மூன்றையும் கொண்ட வினைமுற்றைச் சொல். படி + ப் + ஆன் = படிப்பான்—எதிர்கால வினைமுற்று. ஆண்பால்.

2. (1) நில் - பகுதி, (2) பெண்பால், (3) எதிர்காலம். இம்மூன்றையும் கொண்ட வினைமுற்றைச் சொல். நில் + கிறு + ஆள் = நிற்கிறுள்.

3. (1) உண் - பகுதி, (2) பலர்பால், (3) இறந்த காலம். உண் + ட் + ஆர் = உண்டார்.

இம்மாதிரியே பின்வருவனவற்றைக்கொண்ட வினைமுற்றுக்களைக் கூறு :—

(1) வா பகுதி, நிகழ்காலம், ஆண்பால்.
(2) நில் பகுதி, இறந்தகாலம், பெண்பால்.
(3) போ பகுதி, எதிர்காலம், பலர்பால்.

14. நெசவுத் தொழில்

(படப் பயிற்சி)

படம் பார்த்து நெசவுத் தொழிலை விவரி :



பயிற்சி

I. 1. பஞ்சு-நூல் நூற்கும் யந்திரம்-பருத்தி நூல் கடை-பாவு தோய்தல்-அணுவாக்கல்-தார் திரித்தல்-தறிவேலை-துணி அறுத்தல்-துணியை மடித்தல்-ஜவுளிக் கடை: இக்குறிப்புக்களைக் கொண்டும் படத்துணை கொண்டும் நெசவுத்தொழில் பற்றி ஒரு கட்டுரை வரைக.

2. இது போன்ற நீ அறிந்த வேறொரு தொழிலைப் பற்றி விவரித்து எழுது.

3. பஞ்சு தன் வரலாற்றைக் கூறுவதுபோலக் கூறு.

II. 1. கண்ணன் வந்தான் —இது இறந்தகாலம்.
கண்ணன் வருகிறான் —இது நிகழ்காலம்.
கண்ணன் வருவான் —இது எதிர்காலம்.

பழைய காலக் கதை கூறும் எல்லா வாக்கியங்களிலும் இறந்தகால வினைமுற்றுக்களே இருக்கும்; இப்பொழுது நடைபெறுகின்ற செய்திகளைக் கூறும் வாக்கியங்களில் நிகழ்கால வினைமுற்றுக்களே இருக்கும்; இனிநடைபெற இருக்கும் செய்திகளைக் கூறும் வாக்கியங்களில் எதிர்கால வினைமுற்றுக்களே இருக்கும். இதனை நீ நன்கு நினைவிற் கொள். நீ இதனைத் தெரிந்துகொண்டால், இறந்தகால நிகழ்ச்சியை, தேவைப்பட்டால், மற்ற இருகால நிகழ்ச்சிகளாய் மாற்றிக் கூற முடியும். ஒரு கால வினைமுற்றை மற்ற இருகால வினைமுற்றுக்களாய் மாற்றத் தெரிய வேண்டும்.

2. மாற்றப்படுவர்—எதிர்காலம்.
மாற்றப்படுகின்றனர்—நிகழ்காலம்.
மாற்றப்பட்டனர்—இறந்தகாலம்.

—இப்பாடத்தில் உள்ள வினைமுற்றுக்களை இவ்வாறு மாற்றத் தெரிந்துகொள்.

145864
0-,6(5)

15. அறிவும் ஆராய்ச்சியும்



1. பண்டைக்கால மனிதன் முதலில் மலைக் குகைகளில் வாழ்ந்தான். அப்பொழுது அவனுக்கு வீடு கட்டத் தெரியாது; கூட்டு வாழ்க்கை இல்லை; பயிரிடும் அறிவு இல்லை. பிறகு நாளடைவில் அறிவு வளர்ச்சி உண்டாக உண்டாகத் தனக்கொரு வீடு அமைக்கும் முறைபற்றி ஆராய்ந்தான்; முதலிற் கூரைவீட்டை அமைத்தான்; பிறகு ஓட்டு வீட்டை அமைத்தான்; பின்னர் மாடி கட்ட அறிந்தான்; இப்பொழுது ஒரே வீட்டில் பல மாடிகளை அமைத்து வாழ்கின்றான். இவ்வாறு அவன் அறிவு வளர ஆராய்ச்சி வளர்ந்தது; ஆராய்ச்சி பெருக அறிவு பெருகியது. அறிவும் ஆராய்ச்சியும் ஒன்றை ஒன்று பிணைத்துக்கொண்டு இருப்பவை.

2. பழைய மனிதன் காய்ந்த சுள்ளிகளை எரித்து இரவில் வெளிச்சத்தை உண்டாக்கினான்; பிறகு வேர்க்கடலை எண்ணெய், விளக்கெண்ணெய் இவற்றைப் பயன்படுத்தி விளக்கெரித்தான்; மண்ணெண்ணெய் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு அதனைப் பயன்படுத்தத் தொடங்கினான்; மின்சாரத்தின் பயனை ஆராய்ந்து அறிந்த பிறகு மின்சார விளக்குகள் எரியலாயின. விளக்கில் மனிதன் கொண்டுவந்த வளர்ச்சியைப் பாருங்கள். இந்த வளர்ச்சி மனிதன் அறிவுகொண்டு ஆராய்ச்சி செய்ததன் பலனாகும்.

3. முதலில் மனிதன் விலங்குகள்மீது பிரயாணம் செய்தான்; தன் பொருள்களை அவற்றின் மேல் ஏற்றினான்; பின்னர்த் தானே கைவண்டி செய்து தள்ளினான்; பிறகு அதனை விலங்கைப் பூட்டி ஓட்டினான். நீராவியின் சக்தி கண்டறிந்த பிறகு புகைவண்டி உருவானது. மின்சாரத்தின் சக்தி வெளிப்பட்ட பிறகு மின்சார ரயில்

உண்டானது ; வானவூர்தி ஏற்பட்டது. இவ்மாறுதல்கள் யாவும் ஆராய்ச்சியின் பயன்கள் அல்லவா ?

4. பழைய காலத்தில் மனிதன் வெளியூரில் இருந்த மற்றொருவனுக்குக் கடிதத்தை ஆள்மூலம் அனுப்பிவந்தான். அந்த ஆள் பல நாள் நடந்து சென்று குறிப்பிட்ட ஊரை அடைந்து கடிதம் கொடுத்துவந்தான். இதனுல் நேரம் வீணுதல்—ஆள் கஷ்டம்—வீண்செலவு ஏற்பட்டன. இவற்றைப்போக்க அறிவு முனைந்தது ; ஆராய்ச்சி மிகுதிப்பட்டது. அந்த ஆராய்ச்சியின் பயனே இன்றுள்ள அஞ்சல் முறை. இதற்குப் புகைவண்டியும் வானவூர்தியும் இன்று பெருந்துணை புரிகின்றன.

5. மின்சாரத்தின் பயன் கண்டறியப்பட்ட பிறகு உலகில் உண்டான மாறுதல்கள் பல. ஒரே ஊரில் வேறிடத்தில் உள்ள ஒருவருடன் நீ நினைத்தவுடன் நேரிற் பேச முடியுமா ? பழைய காலத்தில் முடியாது ; இப்பொழுது முடியும். எப்படி ? நீ டெலிபோன் கருவி மூலம் அவருடன் பேசலாம் ; அவர் உன்னிடம் பேசலாம். நீ சென்னையில் இருந்துகொண்டு டெல்ஹியில் இருப்பவருடனும் உடனுக்குடன் பேசலாம். இத்தகைய வியக்கத்தக்க மாறுதல்கள் ஆராய்ச்சியால் உண்டானவை அல்லவா ?

6. ஒருவரது பாட்டும் பேச்சும் எந்தக் காலத்திலும் நிலைத்திருக்கும்படியாக இன்று கிராமபோன் எந்திரம் செய்துவிட்டது. மின்சார சக்தியின் பயனுல் ஒலித்தட்டுகளில் பாட்டும் பேச்சும் பதிவாகின்றன. அத்தட்டுகளை வேண்டும் போது கிராமபோன் எந்திரத்தில் வைத்து விசையைக் கொடுத்தால் பாட்டையோ, பேச்சையோ கேட்டு மகிழலாம். இப்பொழுது வானொலி நாட்டில் மிகுந்த அளவு

பயன்படுகின்றது அல்லவா? உலகத்தின் ஒரு மூலையில் இருந்து ஒருவர் பேசுவது எல்லா நாடுகளில் இருப்பவர்க்கும் வானொலி மூலம் கேட்கிறதே! இது வியப்பூட்டும் செயல் அல்லவா? ஆராய்ச்சியின் பயனைப்பார்! இவ்வாறு மனிதன் தன் அறிவு கொண்டு ஆராய்ந்து செய்துள்ள அற்புதங்கள் பலவாகும்.

7. குழந்தாய், நீ எதனையும் உன் அறிவு கொண்டு ஆராயப் பழகவேண்டும்; ஆராய்ச்சி அறிவை வளர்க்கும்; அதுவே. மனிதனை உயர் நிலைக்குக் கொண்டு செல்வது; நாகரிகத்தை வளர்ப்பது; இன்பவாழ்வைத் தருவது. ஆராய்ச்சி இல்லாவிடில், நாம் மலைக்குகைகளில் இருந்திருப்போம் என்பதை மறவாதே.

அரும்பொருள்

பிணைத்து - சேர்த்து. முனைந்தது - முற்பட்டது. வானவூர்தி - ஆகாய விமானம். மூலம் - வழி. வான் ஒலி - ரேடியோ. கூட்டுவாழ்க்கை - பலர் கூடிவாழ்தல், சமூக வாழ்க்கை.

பயிற்சி

I. விடை கூறு :—

1. அறிவும் ஆராய்ச்சியும் வீட்டுமுறையில் செய்த மாறுதல்கள் எவை?

2. ‘இந்த வளர்ச்சி மனிதன் அறிவுகொண்டு ஆராய்ச்சி செய்ததன் பலனாகும்’—எந்த வளர்ச்சி?

3. ‘இம்மாறுதல்கள் யாவும் ஆராய்ச்சியின் பயன்கள் அல்லவா?’—எம்மாறுதல்கள்?

4. அஞ்சல் முறை எப்படி மாறுதல் பெற்றது?

5. டெலிபோன் கருவி: இதன் பயன் யாது?

6. கிரமபோன், வானொலி—இவற்றின் பயன் என்ன?

7. நீ இப்பாடத்தில் அறிவது யாது?

II. 1. மனிதன் முதலில் பயிரிட அறியான்—இது செயல் நிகழாமையைக் குறிக்கும் வினைமுற்று.

2. மனிதன் பிறகு பயிரிட அறிந்தவன்—இது செயல் நிகழ்ந்ததைக் குறிக்கும் வினைமுற்று.

அறியான்—எதிர்மறை வினைமுற்று
அறிந்தான்—உடன்பாட்டு வினைமுற்று } எனப்படும்.

(1) வந்தான், நின்றான், படித்தாள், அமைத்தான்—உடன்பாட்டு வினைகள்.

(2) வந்திலன், நின்றிலன், படித்திலள், அமைத்திலள்—எதிர்மறை வினைகள்.

இவைபோல இப்பாடத்திலுள்ள உடன்பாட்டு வினைமுற்றுக்களையும் எதிர்மறை வினைமுற்றுக்களையும் எடுத்தெழுது.

16. உலகம் தெரிந்த வரலாறு

1. தம்பீ, படத்தைப் பார். இது நாம் வாழும் உலகம். இதில் ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா என்னும் கண்டங்கள் இருக்கின்றன. இவை தவிரக் கடலில் பல நிலப் பகுதிகள் இருக்கின்றன. அவை தீவுகள் எனப்படும். எல்லாக் கண்டங்களிலும் எல்லாத் தீவுகளிலும் மக்கள் வாழ்கிருர்கள். இவை அனைத்திற்கும் கப்பல் போக்குவரவு உண்டு; வான்வழிச் செலவும் உண்டு.

2. ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன் இவை எல்லாம் கண்டறியப்படவில்லை. கொலம்பஸ் என்பவர் இந்தியாவுக்கு வழிகாண முனைந்து ஐரோப்பாவிலிருந்து மேற்கு நோக்கிச் சென்ருர்; பழைய காலப் பாய்மரக் கப்பலில் பலநாள் பிரயாணம் செய்து மூவாயிரம் கல் தொலைவு சென்ருர்; இறுதியில் மேற்கு இந்தியத் தீவுகளைக் கண்டார். அவரே புது உவுகம் எனப்படும் அமெரிக்காவைக் காண வழிகாட்டியாக இருந்தவர். அவருக்குப் பிறகு அமெரிக்கோ என்பவர் இன்றைய அமெரிக்காவைக் கண்டு பிடித்தார். அதனுல் அக்கண்டம் அவர் பெயர் பெற்றது.

3. **மெகலன்** என்பவர் இன்று கூறப்படும் எல்லாப் பெருங்கடல்களிலும் யாத்திரை செய்தார். அவரே 'உலகம் தட்டையன்று; உருண்டை வடிவமுள்ளது' என்னும் உண்மையை முதன் முதல் கண்டவர். ஜேம்ஸ் குக் என்பவர் உலகத்தை மூன்று முறை சுற்றி வந்தார்; பசிபிக் பெருங்கடலில் உள்ள ஆஸ்திரேலியாவையும் கணக்கற்ற தீவுகளையும் கண்டு பிடித்தார்; ஒருதீவில் சுதேசிகளால் கொல்லப்பட்டார்.


ஐரோப்பா
ஆசியா
ஆப்பிரிக்கா
வட அமெரிக்கா
தென் அமெரிக்கா
பெரு

4. பியரி என்பவர் உலகத்தின் வட கோடியாகிய வடமுனையைக் கண்டார்; பனி உயர்ந்த அப்பகுதியில் அவர் பட்ட துன்பங்கள் பல. அமண்ட்சன் என்பவர் உலகத்தின் தென் முனையைக் கண்டார்; மீண்டுவருகையில் பசியாலும் குளிராலும் துன்புற்று இறந்தார்.

5. ஆப்பிரிக்கா, அமெரிக்கா என்னும் கண்டங்களின் உட்பகுதிகளைக் காணவும், கண்டு அவற்றை நாடாக்கவும், நாடாக்கியபின் வளப்படுத்தவும், மக்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள்! ஆப்பிரிக்காவின் தென் பகுதியில் பல ஆண்டுகள் பிரயாணம் செய்து பல துன்பங்களைப் பட்டு, அப்பகுதியைப்பற்றிப் பல உண்மைகளை வெளிப்படுத்திய பெரியார் டேவிட் **லிவிங்ஸ்டன்** என்பவராவர். அவர் ஆப்பிரிக்காவிலேயே இறந்தார். மேற்கு ஆப்பிரிக்காவைக் காண முயன்று வெற்றி பெற்றவர் **மங்கோ பார்க்** என்பவர். அவரும் ஆப்பிரிக்காவிலேயே இறந்தார்.

6. தம்பீ, இவ்வாறே அமெரிக்காவின் உட்பகுதிகளுக்குச் சென்ற வீரர் பலர்; அவர்கள் மலைகளிலும் காடுகளிலும் புகுந்து பல துன்பங்களைப் பட்டு நாடுகளை அமைத்தனர்; பலர் அந்த முயற்சியில் மாண்டனர். தென் அமெரிக்காவில் **பிஸாரோ** என்பவர் 'பெரு' நாட்டைக் கண்டறிந்து ஸ்பெயின் நாட்டினரை அங்குக் குடியேற்றினர். இவ்வாறு ஐரோப்பிய வீரர் பலருடைய உழைப்பால் ஐரோப்பியர் அங்கங்குக் குடியேறி நாடுகளை அமைத்துக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

7. இப்பெருவீரர்களின் உழைப்பால் உலகம் நமக்குத் தெரியலாயிற்று; மக்கள் உலகெங்கும்

பரவிக் குடியேற வழி ஏற்பட்டது. உலகத்தின் பல பகுதிகளும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொள்ளக் கப்பல்களும் வான வூர்திகளும் வானொலியும் பெருந் துணைபுரிகின்றன. நமக்கு உலகத்தின் பல பகுதிகளை உணர்த்திய பெரு மக்களுக்கு நம் வணக்கமும் நன்றியும் உரியவாகுக!

அரும்பொருள்

கண்டம் - பெரும் பிரிவு. செலவு - யாத்திரை. முனைந்து - முன்வந்து.

பட எண்கள் இவர்களைக் குறிக்கின்றன:

1. வாஸ்கோட காமா, 2. கொலம்பஸ், 3. மெகலன், 4. பியரி, 5. அமண்ட்சன், 6. ஜேம்ஸ் குக், 7. பிஸாரோ, 8. லிவிங்ஸ்டன், 9. மங்கோ பார்க்.

பயிற்சி

I. விடை கூறு:—

1. உலகில் உள்ள கண்டங்கள் எவை?
2. புது உலகம் எவ்வாறு கண்டறியப்பட்டது?
3. மெகலன் கண்டறிந்த உண்மை யாது?
4. வட-தென் முனைகளைக் கண்டறிந்தவர் யாவர்?
5. ஆப்பிரிக்காவின் பல பகுதிகளைக் கண்ட வீரர்கள் யாவர்?
6. பிஸாரோ யாவர்? அவர் செய்த தொண்டு யாது?
7. 'இப்பெருமக்களுக்கு நம் வணக்கமும் நன்றியும் உரிய.—ஏன்?

II. 1. வளப்படுத்த, குடியேற, இணைக்க, துன்புற்று, வழிகாட்டி, முயற்சி—இவற்றை உன் சொந்த வாக்கியங் களிற் பயன்படுத்து.

2. மீண்ட, துன்புற்று, குடியேறி, பரவி, சென்ற, வெளிப்படுத்திய, போராடி, பட்ட—இவற்றுள் பெயரெச் சங்கள் எவை? வினையெச்சங்கள் எவை?



17. சொல் தவருத பேரரசர்

1. ஐரோப்பாவை ஒரு குடைக்கீழ் ஆண்ட பேரரசர் நெப்போலியன். அவர் பள்ளியில் படிக்கையிலும் பிற்கால வாழ்க்கையிலும் சொன்ன சொல் தவறியவர் அல்லர். அவர் படித்த பள்ளிக்கு அருகில் ஒரு கிழவி பழங்களை விற்றுவந்தாள். நெப்போலியன் அவளிடம் பழங்களை வாங்கித் தின்பார்; காசு இல்லாதபொழுது கடனுக்கு வாங்கி உண்பார்; காசு கிடைத்ததும் கடனைத் தீர்ப்பார். கிழவிக்கு அவரிடம் நம்பிக்கை ஏற்பட்டது. அவள் அவருக்குத் தாராளமாகக் கடன் கொடுத்து வந்தாள்.

2. நெப்போலியன் திடீரென்று தாம் படித்து வந்த பள்ளியையும் ஊரையும் விட்டுச் செல்ல வேண்டியவரானுர். அவர் கிழவியிடம் சென்று, "பாட்டீ, நான் திடீரென்று வேற்றூர்க்குச் செல்லும் தேவை ஏற்பட்டிருக்கிறது. இச்சமயத்தில் உன் கடனைத் தீர்க்கப் பணம் இல்லை. ஆயினும் விரைவில்

உன் கடன் தீர்க்கப்படும்,'' என்ருர். கிழவி மிக்க மகிழ்ச்சியுடன் சிறுவர்க்கு விடைதந்தாள்.

3. பல ஆண்டுகள் கழிந்தன, ஒரு நாள் நெப்போலியன் தாம் படித்துக்கொண்டிருந்த நகரத்திற்கு வந்தார். அவர் எந்த நிலேயில் அங்கு வந்தார்? அவர் பிரஞ்சு நாட்டுப் பேரரசர் என்னும் தகுதியுடன் வந்தார். அந்நிலேயிலும் அவர் பழம் விற்ற கிழவியை மறக்கவில்லே. அவர் மாறுவேடம் பூண்டு தம் மெய்க்காவலுடன் கிழவியின் கடையை அடைந்தார்; அவளிடம் பழம் ஒன்றை வாங்கித் தின்றுகொண்டே, ''பாட்டி, நமது பேரரசர் இந்த நகரத்திற்கு வந்திருக்கிருரே, நீ அவரை அறிவாயா?'' என்று கேட்டார், கிழவி, ''ஆம் அவரை நன்கு அறிவேன். அவர் பள்ளியில் படித்தபொழுது என்னிடம் பழங்களே வாங்கிவந்தார்,'' என்ருள்.

4. பேரரசர், ''பாட்டீ, அவர் பணம் தவருமல் கொடுத்து வந்தாரா?'' என்று கேட்டார். கிழவி, ''ஆம்'' என்று உடனே பதில் அளித்தாள். பேரரசர், ''பாட்டீ, நீ மறந்துவிட்டாய். அவர் உனக்குப் பணம் தரவேண்டும் நிலேயில் இருக்கிருர். நீ இதனே மறந்துவிட்டாய்,'' என்ருர். கிழவி அவரை உற்று நோக்கினுள். பேரரசர் நகைத்துக் கொண்டே, ''பாட்டீ, நான் தான் உன்னிடம் கடன் பட்ட நெப்போலியன்,'' என்ருர்.

5. கிழவி வியப்புடன் அவரை உற்று நோக்கி, ''ஆம், நீரே நெப்போலியன்,'' என்று கூறிப் பணிந்தாள். பேரரசர் அவளே எடுத்து அன்புடன், ''பாட்டீ, நான் பெற்ற கடன் இப்போது தீர்க்கப்படும்'' என்ருர். அச்சொல்லின் பயன் என்ன? கிழவி மாளிகையில் வாழலானுள்; பழ வியாபாரத்தை

விட்டாள். அவள் காலம் முடியச் சுகத்துடன் வாழப் பேரரசர் பெருஞ் செல்வத்தைக் கொடுத்தார்.

6. குழந்தாய், நெப்போலியனின் நினைவாற்றல், சொன்ன சொல் தவருமை, அன்புகனிந்த அறச் செயல் இவற்றைக் கவனி.

அரும்பொருள்

பேரரசர் - மன்னர் மன்னன். மெய்க்காவலர் - (அரசன்) உடற்காவலர். ஆற்றல் - சக்தி.

பயிற்சி

I. விடை கூறு :—

1. நெப்போலியன் அச்சம் அறியாதவன் என்பது எப்படித் தெரிகிறது?

2. அவர் ஊரைவிட்டுப் போகையில் கிழவியிடம் என்ன கூறினர்?

3. அவர் அந்த வாக்கை எவ்வாறு காப்பாற்றினர்?

4. அவரிடம் காணப்பட்ட நற்பண்புகள் யாவை?

II. 1. நினைவாற்றல், தவருமை, அன்புகனிந்த, உற்று நோக்கி—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.

2. இப்பாடத்தின் ஒவ்வொரு பத்தியையும் படித்துத் தலைப்புக் கொடு.

3. நான்காம் பத்தியிலுள்ள எ. ப. செ. கூறு.

4. ஐந்தாம் பத்தியில் உள்ள வினைமுற்றுக்களைச் சொல்.

5. அவ்வினைமுற்றுக்களைப் பிரித்துப் பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சுட்டு.

III. 1. பால்—நிலம்—சூரியன்—பசு—நரி

இவற்றை இடமறிந்து பொருத்திப் படி :—

(1) வைரநகை———போல் பிரகாசிக்கிறது.

(2) பொறுமைக்கு———பெயர் பெற்றது.
(3) சல்வை———போல் இருக்கிறது.
(4) அவன்———போல் சாதுவானவன்.
(5) இவன்———போல் தந்திரக்காரன்.

2. ஏழை, தொழிலாளி, பாரம், நடவாது—எதிர்ச் சொற்களைக் கூறு.

3. கல் + அடி = கல்லடி, மண் + அடி = மண்ணடி.

நல்+அரசு, கல்+அணை, பல்+அழகு.—இவற்றைச் சேர்த்துப் படி.

IV. நீ கண்ணனுடன் வந்ததை நான் பார்த்தேன். இந்த வாக்கியத்தில் மூவர் குறிக்கப்படுகின்றனர். இந்த வாக்கியத்தைச் சொல்பவன் ஒருவன். அவன் நான் என்று தன்னைக் குறிக்கிறான். அவன் சொல்வதை முன் நின்று கேட்பவன் ஒருவன். அவன் நீ என்னும் சொல்லால் குறிக்கப்படுகிறான். பேசுகிறவன், பேசுவதை முன் நின்று கேட்பவன் இவர்களுக்கு முன் இராத ஒருவன் பேச்சில் குறிக்கப்படுகிறான். அவன் பெயர் கண்ணன் என்பது.

இம்மூவர் இடங்களும் முறையே (1) தன்மை இடம், (2) முன்னிலை இடம், (3) படர்க்கை இடம் எனப்படும்.

(1) நான், யான், நாம், யாம்—தன்மைப் பெயர்கள்.
(2) நீ, நீர், நீங்கள்—முன்னிலைப் பெயர்கள்.
(3) அவன், அவள், அவர்
அது, அவை, இவற்றுடன்
எல்லாப் பெயர்களும் } படர்க்கைப் பெயர்கள்.



18. கடிதங்கள்

1. அழைப்புக் கடிதம்

15, கம்பர் தெரு,
இராயபுரம், சென்னை,
19-10-'49.

அன்புள்ள தமிழரசிக்கு, நலம்.

உன் நலம் அறிய ஆவல். நாளை எனது இல்லத்தில் என் பெற்றோர் எனது பிறந்த நாளைக் கொண்டாட இருக்கின்றனர். நாளை விருந்திற்கு என் நண்பர் பலர் வருவர். நீயும் வந்திருந்து கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுகிறேன். நான் உன் வரவை எதிர் நோக்கிக் காத்திருப்பேன்.

இங்ஙனம்,
உன் அன்புள்ள தோழி,
ப. கமலம்

திருவாட்டி **மா. தமிழரசி,**
20, செங்குட்டுவன் தெரு,
திருவள்ளுவர் நகர், சென்னை.

2. வாணிகக் கடிதம்

25, வள்ளுவர் தெரு,
செங்கற்பட்டு,
25-10-'49.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
மானேஜர் அவர்களுக்கு,

அன்புள்ள ஐயா,

கீழ்க்காணும் ஏழு நூல்களை எனது முகவரிக்கு வி. பி. பி.-யில் அனுப்பும்படி வேண்டுகிறேன்.

1. தாமரை வாசகம்—முதல் ஐந்து புத்தகங்கள்
2. செந்தமிழ் இலக்கணம்—முதல் நூல்
3. இராஜேந்திர சோழன்—துணைப்பாட நூல்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
மு. நக்கீரன்

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி மானேஜர்,
6, கொண்டி செட்டித் தெரு,
சென்னை—1.

3. வேண்டுகோள் கடிதம்

15, சேக்கிழார் தெரு,
குன்றத்தூர்,
25-10-'49.

ஊராண்மைக் கழக ஆணையாளர் அவர்களுக்கு,

அன்புள்ள ஐயா,

எங்கள் சிறுவர் கழகம் சென்ற இரண்டு ஆண்டுகளாய்த் தமது ஊரைத் தூய நிலையில் வைத்துக் கொள்ளத் தங்களுடன் ஒத்துழைத்து வருவதைத்

தாங்கள் நன்கு அறிவீர்கள். தங்கள் கவனம்செல்லாத தெரு நத்தத்தில் ஒன்று இருக்கிறது. அத்தெருவில் விளக்கிடுவது இல்லை. அங்கு இருக்கும் மக்கள் கல்வி இல்லாதவர்கள்; மிக்க ஏழைகள். தங்களை ஒருவரும் கவனிப்பதில்லை என்று அவர்கள் குறை கூறுகிறார்கள். அவர்கள் நம்மூரினர்; நம்முடன் வாழ்பவர்; ஊரின் இன்ப-துன்பங்களில் பங்குபெற உரிமை உடையவர்கள். ஆதலால் அவர்கள் குறை முற்றிலும் நியாயமானது. அக்குறையை விரைவில் போக்கும்படி தங்களை வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
மா. இளங்கோவன்
(சிறுவர் கழகச் செயலாளன்)

உயர்திரு ஆணையாளர் அவர்கள்,
ஊராண்மைக் கழகம்,
குன்றத்தூர். (செங்கற்பட்டு மாவட்டம்)

அரும்பொருள்

முகவரி - விலாசம். ஊராண்மைக் கழகம் - பஞ்சாயத் போர்டு. ஆணையாளர் - காரியம் நிறைவேற்றும் அதிகாரி.

பயிற்சி

I. 1. இல்லத்தில்=இல்லம்+அத்து+இல்
பள்ளத்தில்=பள்ளம்+அத்து+இல்

இப்படியே கீழ் வருவனவற்றைப் பிரி :—
மரத்தில், அகத்தில் நகத்தில், புளியம்பழம்.

2. கவனிப்பது+இல்லை=கவனிப்பதில்லை.

இதைப்போல இவற்றைப் பிரி :—உண்பதில்லை, காண்பதில்லை, நடப்பதில்லை, செய்வதில்லை, வருவதில்லை.

3. சிறுவர் கழகக் கூட்டம் நடத்தப் பள்ளிக்கூட மண்டபத்தைப் பயன்படுத்த அதிகாரிகளிடம் அநுமதி வேண்டி ஒரு கடிதம் எழுது.

4. புத்தகங்களை அனுப்பும்படி வேண்டி வாணிகக் கடிதம் ஒன்று வரை.

5. உங்கள் கழகக் கூட்டத்திற்குத் தலைவராக இருக்கும்படி வேண்டி ஒருவருக்குக் கடிதம் எழுது.

6. குறித்த நாளில் கூட்டம் நடத்த முடியாமைக்குக் காரணமும் வருத்தமும் தெரிவித்து மேற்சொன்னவருக்கே ஒரு கடிதம் எழுது.

II. 1. நான் வந்தேன்—தன்மை ஒருமை வினைமுற்று.
நாம், நாங்கள் வந்தோம்—தன்மைப் பன்மை வினைமுற்று.

2. நீ வந்தாய்—முன்னிலை ஒருமை வினைமுற்று.
நீர், வந்தீர் / நீங்கள் வந்தீர்கள் } —முன்னிலைப் பன்மை வினைமுற்று.

3. அவன், கண்ணன் வந்தான்—ஆண்பால் வினைமுற்று.
அவள், சீதை வந்தாள்—பெண்பால் வினைமுற்று.
அவர்கள், அரசர்கள் வந்தார்கள்—பலர்பால் வினைமுற்று.
அது, எலி ஓடினது—ஒன்றன்பால் வினைமுற்று.
அவை, எலிகள் ஓடின—பலவின்பால் வினைமுற்று.

19. கைத்தொழில்

1. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் ;
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் ;
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ ?

2. உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் நடவாது ;
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ ?

3. நெசவுக் காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்திடுவார் ?
குசவன் செய்திடும் பாண்டமன்றோ
குடித்தனம் நடத்திட வேண்டுமென்றும் ?

4. கொல்லரும் தச்சரும் கூடாமல்
கூடமும் மாடமும் வீடாமோ !
கல்லடி சிற்பியும் தச்சருமே
காரியம் பலவினுக் கச்சாணி.

5. சலவை சவரம் செய்தாலும்
சாக்கடை கழுவுதல் செய்தாலும்
உலகுக் கதனுல் உபகாரம்
ஒன்றும் தெரியார் வெறும்பாரம்.

6. ஏழை செல்வன் என்றுவரும்
எல்லாப் பிணக்கும் நின்றுவிடும் ;
வாழிய வாழிய கைத்தொழில்கள்
வாழிய நித்திய சத்தியமும்.

—நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

அரும்பொருள்

விழவு - திருவிழா. கலை - நடனம் முதலிய கலைகள். மாடம் - மாடி. அச்சாணி - கடையாணி. பாரம் - சுமை. பிணக்கு - சண்டை. வாழிய - வாழ்க. நித்திய - என்றும் உள்ள.

பயிற்சி

I. விடை கூறு :—

1. ஒவ்வொருவரும் கைத்தொழில் கற்கவேண்டும் என்பது பற்றி உன் கருத்தென்ன ?

2. 'காரியம் பலவினுக் கச்சாணி'—யார் ? எப்படி ?

3. இப்பாடத்தில் கூறப்படும் தொழிலாளிகள் யார் ?

II. மளமள—குடுகுடு — சிலுசிலு—நறநற— இவற்றைக் கீழ்வரும் காலி இடங்களில் பொருத்தமாக அமைத்துப் படி :

1. —— என்று ஓடினன்.
2. கண்ணன் —— என்று பல்லைக் கடித்தான்.
3. மரம் —— என்று முறிந்தது.
4. காற்று —— என்று வீசியது.

III. படர்க்கையிடத்து ஐந்து பால்கள் உண்டு. ஆதலால் படர்க்கையில் வரும் வினைமுற்றுக்களை 'இன்னபால் வினைமுற்று' என்று சொல்வதே முறை.

வந்தான்—ஆண்பால் வினைமுற்று.
வந்தாள்—பெண்பால் வினைமுற்று.
வந்தார்—பலர்பால் வினைமுற்று.
வந்தது—ஒன்றன்பால் வினைமுற்று.
வந்தன—பலவின்பால் வினைமுற்று.

இப்பாடத்தில் உள்ள தன்மை, முன்னிலை வினைமுற்றுக்களையும் ஐம்பால் வினைமுற்றுக்களையும் எடுத்துக்கூறு.



20. புதை பொருள் ஆராய்ச்சி

1. உலகம் தோன்றிப் பல ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன. அந்தப் பழைய காலத்தில் வாழ்ந்த மக்கள் கட்டிய வீடுகள் எங்கே? வாழ்ந்த நகரங்கள் எங்கே? சந்திரகுப்தன் இருந்து ஆண்ட பாடலிபுரம் எங்கே? கோவலன் வாழ்ந்த காவிரிப்பூம்பட்டினம் எங்கே? பல்லவர் துறைமுகப் பட்டினமான மஹாபலி புரத்தின் முழுப்பகுதியும் எங்கே? யாவும் நாளடைவில் பாழ்பட்டுப் புதையுண்டன.

2. கடற்கரைப் பட்டினங்கள் கடல்கொந்தளிப்பால் அழிந்தன; ஆற்றோர நகரங்கள் ஆற்றுவெள்ளத்தால் அழிந்தன; அழிந்து, நாளடைவில் மண்ணுள் மறைப்புண்டன. சில நகரங்கள் பகைவர்க்குப் பயந்து கைவிடப்பட்டன. அவை ஆண்டுகள் ஆக ஆக, வெயிலாலும் மழையாலும் அழிவுற்றன. பிறகு அவை நாளடைவில் மண்மூடுபட்டன. அவ்விடங்கள் பெரிய மேடுகளாக இருந்தன. அம்

மேடுகளுக்கு அடியில் நகரங்கள் உண்டு என்பதை அறியாமல் பின்னேர் அம்மேடுகளின்மீது கட்டடங்களைக் கட்டினர்.

3. பழைய அரசர்கள் இருந்தாண்ட நகரங்கள் பல இன்று கிராமங்களாய் இருக்கின்றன. கங்கை கொண்ட சோழபுரம், உறையூர், காவிரிப்பூம்பட்டினம் இவற்றை உதாரணமாகக் கூறலாம். இந்தப் பகுதியில் பூமிக்கடியில் பழைய காலத்து நாணயங்கள், கற்கருவிகள், உலோகக் கருவிகள், அற்புத வேலைப்பாடு அமைந்த மணிகள், சிறிய கிணறுகள் முதலியன காணப்படுகின்றன.

4. இத்தகைய இடங்களைத் தோண்டிப்பார்த்து ஆராய்ச்சி செய்ய இந்திய அரசாங்கம் ஒரு கழகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் பெயர் **புதை பொருள் ஆராய்ச்சிக் கழகம்** என்பது.

5. அக்கழகத்தார் வரலாற்றுப் புகழ்பெற்ற பழைய இடங்களைத் தோண்டிப் பார்க்கின்றனர். இந்தியாவில் பல இடங்களில் பழைய மக்கள் வாழ்ந்த வீடுகளையும் அவர்கள் பயன்படுத்திய கருவிகளையும் பிற பொருள்களையும் கண்டெடுக்கின்றனர்; அவற்றின் காலங்களை ஆராய்ந்து முடிவு கட்டுகின்றனர். அவர்கள் செய்துவரும் ஆராய்ச்சியால் நமது நாட்டு வரலாறு பெருமை அடைந்துவருகிறது; வரலாற்றுச் செய்திகள் விரிவாகிக்கொண்டே போகின்றன.

6. ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் சிந்து மாகாணத்தில் ஒரு பழைய நகரம் கண்டறியப்பட்டது. அதன் பெயர் மொஹெஞ்சொ-தாரோ என்பது. அந்நகரம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. வீடுகள் பலமான பெரிய செங்கற்களால் கட்டப்பட்டவை. தெருக்கள் அகன்

றவை. சில வீடுகள் மாடிவீடுகள். மேல்மாடியிலிருந்து கழிவுநீர் செல்லச் சுவரில் பாதை அமைக்கப்பட்டிருந்தது. சாக்கடைகள் மூடப்பட்டிருந்தன; அந்த நகரத்தில் அழகிய வேலைப்பாடு கொண்ட மண்பாண்டங்கள் கிடைத்தன; பொன், வெள்ளி, செம்பு இவற்றாலான பொருள்கள் அகப்பட்டன; நீராடும் குளம் ஒன்று காணப்பட்டது.

7. அந்நகர அமைப்பையும் அங்குக் கிடைத்த பொருள்களையும் ஆராய்ந்த கழகத்தார், "இந்நகர மக்கள் வாணிகத்திற் சிறந்தவர்கள்; நகர சுகாதாரத்திற் கவலை கொண்டவர்கள்; மிக்க நாகரிகம் உடையவர்கள்; அயல் நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டவர்கள்," என்று கூறினார்கள்.

8. அந்த நகரத்தின் ஆராய்ச்சி இன்னும் முடிவு பெறவில்லை. அக்கழகம் நம் தமிழ்நாட்டிலும் ஆராய்ச்சி செய்கிறது. பொதுமக்கள் இத்துறையில் மிகுந்த கவனம் செலுத்தினால் நம் பழைய நகரங்களை ஆராய்ந்து பல உண்மைகளை அறியக்கூடும்; அரசாங்கமும் இந்த முயற்சியில் மிகுதியாக ஈடுபட வேண்டும்.

அரும்பொருள்

கொந்தளிப்பு - பொங்குதல். பின்னோர் - பிற்காலத்தில் வாழ்ந்த மக்கள். கற்கருவிகள் - கல்லாலான கருவிகள். புதைபொருள் - புதைந்து கிடக்கும் பொருள்கள். கழிவு நீர் - சாக்கடை நீர்.

பயிற்சி

I. விடை கூறு :—

1. கடலோர நகரங்கள் எவ்வாறு மறைந்தன ?
2. ஆற்றோர நகரங்கள் என்ன ஆயின ?
3. மேடுகளுக்குள் நகரங்கள் புதையுண்டன — எப்படி ?

4. பழைய நகரங்கள் இன்று எப்படி இருக்கின்றன? அங்குக் கிடைப்பன யாவை?

5. புதைபொருள் ஆராய்ச்சிக் கழகம்—இதன் வேலை யாது?

6. சிந்து மகாணத்தில் காணப்பட்ட நகரத்தின் பெயர் என்ன?

7. ஆராய்ச்சியாளர் அங்குக் கண்டவை யாவை?

8. ஆராய்சியாளர் அந்நகரத்தை ஆராய்ந்து யாது கூறினர்?

9. ஆராய்ச்சிக் கழக வேலையால் என்ன நன்மை உண்டாகிறது?

10. நமது கடமை என்ன?

II. 1. நாடு+பொருள்=நாட்டுப் பொருள்
நாடு+பற்று =நாட்டுப் பற்று
நாடு+துணி =நாட்டுத் துணி

வீடு + பொருள், காடு + மரம், நாடு + புறம், ஆடு + கால், மாடு + கொம்பு—இவற்றைச் சேர்த்துப் படி.

2. ஆறு +பாய்ச்சல்=ஆற்றுப் பாய்ச்சல்
வரலாறு+செய்தி =வரலாற்றுச் செய்தி
வயிறு +வலி =வயிற்று வலி

ஆறு + ஓரம், ஆறு + பாதை, ஆறு + மணல், ஆறு + நீர்—இவற்றைச் சேர்த்துப்படி.

III. சோறு—பாய்—குடை—விளக்கு—வண்டி.

இவற்றுள் ஒவ்வொன்றையும் தக்க இடமறிந்து சேர்த்துப் படி :—

1. ஊருக்குப் போகவேண்டும்——கொண்டுவா.
2. பிச்சைக்காரன் வருகிறான்——கொண்டுவா.
3. மழை பெய்கிறது——கொண்டுவா.
4. ஐயா வந்திருக்கிறார்——கொண்டுவா.
5. இருட்டாயிருக்கிறது——கொண்டுவா.



21. பெரியோர் உரைநடை

1. நீங்கள் இத்தமிழ்ப் பாட நூலையும் இவ் வகுப்புக்கு உரிய துணைப்பாட நூல்களையும் படிப்ப துடன் நின்றுவிடலாகாது. உங்கள் தமிழ் நடை சிறந்த தமிழ்ச் சொற்களைப் பெற்றதாயும் பிழையற்ற நடை உடையதாயும் விளங்கவேண்டுமானால், நீங்கள் புலவர் பலர் எழுதியுள்ள சிறந்த நூல்களைப் படிக்க வேண்டும்; அகராதி கொண்டு புதிய சொற்களுக்குப் பொருள் உணர வேண்டும்; அச் சொற்களை ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறித்துக்கொள்ளவேண்டும்.

2. இம்முறையால் நீங்கள் சொற்களஞ் சியத்தைப் பெருக்கிக்கொண்டே போகலாம்; உங்கள் தமிழ் நடையும் வளர்ச்சி பெறும்.

இங்கு மாதிரியாகப் பெரும் புலவர் இருவர் உரைநடைப் பகுதிகள் தரப்படுகின்றன. அவற்றைப் படியுங்கள்; அப்பெரியவர்கள் நூல்களைப் படித்துப் பயன் பெறுங்கள்.

1. கம்பர்

கம்பர் வீட்டில் ஒரு நன்மை நிகழ்ந்தது. அஞ்ஞான்று சோழர் பெருமானும் குறுநில மன்னரும் கூடியிருந்தனர். வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியாரும் வந்தனர். முன்னரே எல்லாரும் வந்து அமர்ந்துவிட்டபடியால் கூடத்தில் சிறிதும் இடமில்லை. அதனால் முதலியார் சாலகத்தின் மருங்கே அமர்ந்தனர். அது கண்ட சோழன் முதலியோர் அவரை நோக்கி, “ இங்கே வாருங்கள் ; இங்கே வாருங்கள் ” என அழைத்தனர். அவ்வேளை கம்பர் புன்னகையுடன், “ அவரை வைக்கவேண்டிய இடத்தில் வைப்பேன் ”, என்றனர். அனைவரும் சிறு நகை செய்தனர். கம்பர் தாம் சொன்னபடியே தமது இராமாயணத்தில், பல இடங்களில் முதலியார் பெருமையை அமைத்துப் பாடினர்.

புலவர் கதை-மணி. திருநாவுக்கரசு முதலியார்

2. தமிழ்ப் பெரியார் அறுவர்

சென்ற நூற்றாண்டின் இறுதியிலே பெரும் புகழ் பெற்று விளங்கிய தமிழ்ப் பெரியார்களுள் அறுவர் சிறப்பாக எடுத்துச் சொல்லுதற்குரியர். அவர்களாவர் : ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை, வி. கனகசபைப் பிள்ளை, மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பூண்டி அரங்கநாத முதலியார், இராஜமய்யர் என்று பெயர் வழங்கிய சுப்பிரமணிய அய்யர், பெ. சுந்தரம் பிள்ளை. இந்த அறுவரும் ஆங்கிலம் கற்று மேனாட்டுக் கலைப்பண்பில் திளைத்துத் தம் தாய் மொழியாகிய தமிழ்மொழிக்கு ஒவ்வொரு வகையிலே தொண்டு புரிந்தவர்கள். சி. வை. தாமோதரம் பிள்ளை,

தொல்காப்பியம் முதலிய பழந்தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து பதிப்பித்து வெளியிட்டவர். கனகசபைப் பிள்ளை, பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து, தமிழரது பண்டை நாகரிகத்தைப் புலப்படுத்தியவர். மாயூரம் வேதநாயகம்பிள்ளை, இசைத் தமிழில் மேம்பட்டிருந்த தோடு, தமிழில் வசன நூலுக்கும் அடிகோலியவர். பூண்டி அரங்கநாத முதலியார் தமிழாசிரியர்களை ஆதரித்து ஊக்கமளித்து வந்ததோடு, நம் பண்டைத் தமிழ் முறை வழுவாதபடி நூல் இயற்றியவர். இராஜமய்யர், தமிழ் நாட்டில் நவீனகத்தின் தந்தை எனக் கூறுமாறு ஒரு நவீனகத்தை முதன் முதலில் நமக்கு அளித்தவர். சுந்தரம் பிள்ளை, தமிழிலக்கிய ஆராய்ச்சி, தமிழிலக்கிய சரிதம், தமிழ் நாடகம், தத்துவ நூற்புலமை இவற்றிலெல்லாம் மேம்பட்டு, சிறந்த நூல்கள் இயற்றி, இத்துறைகள் வளர்ச்சி யடைவதற்குக் காரணமாயிருந்தவர்.

—தமிழ்ச் சுடர் மணிகள்—பேராசிரியர் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை

அரும்பொருள்

நன்மை - நல்ல நிகழ்ச்சி. அஞ்ஞான்று - அந் நாளில். குறுநில மன்னர் - சிற்றரசர். சாலகம் - வீட்டில் கழிக்கப்படும் நீர் செல்லும் வழி. மருங்கு - பக்கம். சிறுநகை - சிறிய சிரிப்பு. நூற்ருண்டு - நூறு ஆண்டு களைக்கொண்ட கால அளவு. இப்பொழுது நடப்பது இருபதாம் நூற்ருண்டு (1901-2000). இறுதி - கடைசி. திளைத்து - ஊறி. இலக்கியங்கள்-அறிஞர் செய்த நூல்கள். பதிப்பித்து - பல ஏடுகளை ஒப்பு நோக்கி அச்சிட்டு. அடி கோலியவர் - அஸ்திவாரம் போட்டவர். நவீனகம் - கட்டுக் கதை, நாவல். தத்துவ நூல் - இயற்கைத் தத்துவ நூல்.

பயிற்சி

I. 1. கம்பர் என்ற தலைப்பில் உள்ள வாக்கியங்கள் எத்தனை? அவற்றில் உள்ள எ. ப, செ. கூறு.

2. நன்மை, பெருமை, முன்னர், மேம்பட்டு, சிறந்த—எதிர்ச்சொற்களைச் சொல்.

3. பொருத்தமான சொற்களைச் சேர்த்துப்படி

(1) கம்பராமாயணம்	இலக்கண நூல்
(2) தொல்காப்பியம்	கதை தழுவிய செய்யுள் நூல்
(3) கோவலன்	ஒரு புலவர்
(4) கம்பர்	ஒரு வணிகன்

II. ஒவ்வொரு கேள்விக்கும் தக்க விடை எழுது :—

1. ஈயம் பூசுகிறோம். எதற்கு? ஏன்?
2. வெள்ளை அடிக்கிறோம், எதற்கு? ஏன்?
3. அணை போடுகிறோம். எதற்கு? ஏன்?
4. சாவி கொடுக்கிறோம். எதற்கு? ஏன்?
5. மை தீட்டுகிறுள் எதற்கு? ஏன்?

III. 1. மக்கள், தேவர் - உயர்திணை, (திணை - பிரிவு;) விலங்குகள் முதலிய உயிர்களும் உயிர் இல்லாதனவும் அஃறிணை (உயர்வு அல்லாத பிரிவு) என உலகப் பொருள்கள் இரண்டாகக் கூறப்படும்.

2. (1) ஆண்பால், பெண்பால், பலர்பால் - உயர்திணையைச் சேர்ந்தவை.

(2) ஒன்றன்பால், பலவின்பால் - அஃறிணையைச் சேர்ந்தவை.

22. நம் வரலாற்றுச் சின்னங்கள்

1. தம்பீ, மண்ணுக்குள் மறைப்புண்டு புதை பொருள் ஆராய்ச்சியால் வெளிப்படும் கட்டடங்கள், பலவகைக் கருவிகள், மண்பாண்டங்கள் முதலியன நம் நாட்டுப் பழைய வரலாற்றை உணர்த்துகின்றன. ஆதலால் அவை **நம் வரலாற்றுச் சின்னங்கள்** ஆகும்.

2. மண்ணுக்குள் மறையாமல் இருக்கும் பண்டைக்காலக் **கட்டடங்கள்** யாவும் நம் வரலாறுகளை உணர்த்தும் சின்னங்களே ஆகும். அவை கோவில்கள், சமாதிகள், அரண்மனைகள் முதலியன. பதினோராம் நூற்றாண்டில் இராஜராஜசோழன் கட்டிய **தஞ்சைப் பெரிய கோவில்** தமிழ்நாட்டு வரலாற்றுச் சின்னமாகும். அந்த நூற்றாண்டில் இன்றும் உலகத்தார் கண்டு வியக்கத்தக்க முறையில் அக்கோவில் கட்டப்பட்டது என்பது, நம் முன்னோருடைய கட்டடம் கட்டும் திறமையை நன்கு உணர்த்துவதாகும். "கட்டடக் கலையில் மிக்க அறிவு படைத்தவர் தமிழர்" என்பதை உலகறியச் செய்த பெருமை அக்கோவிலுக்கு உண்டு.

3. வட இந்தியாவில் ஷாஜஹான் பேரரசர் பெரும் பொருள் செலவிட்டுக் கட்டிமுடித்த **தாஜ் மஹால்** கட்டடம் உலகத்தார் கருத்தை இழுப்பதாகும். அதன் அற்புத வேலைப்பாடு இன்றும் பாராட்டப்படுகிறது. அது மொகலாயர் காலத்துக் கட்டட அறிவைக் காட்டுவதாகும். மதுரையில் உள்ள **திருமலைநாயக்கர் மஹால்**, நாயக்கர் காலத்துக் கட்டட அறிவை நமக்கு அறிவிப்பதாகும். தஞ்சாவூர்


A.D. acharya

அரண்மனை மஹாராஷ்டிரர் காலத்துக் கட்டடக் கலை அறிவை உணர்த்துவதாகும்.

4. கோவில்களிலும் அரண்மனைகளிலும் அக் காலத்தார் வரைந்த ஓவியங்கள் இருக்கின்றன. அவை நம் முன்னோருடைய ஓவியப் புலமையையும் அக்காலத்தில் ஓவியக்கலை பெற்றிருந்த சிறப்பையும் உணர்த்துவன வாகும்; இவற்றுடன் அக்கால மக்க ளுடைய ஆடை அணிகளைப் பற்றிய விவரங்களையும் நமக்குத் தெரிவிப்பனவாகும்.

5. கல்தச்சர்கள் அரும்பாடுபட்டு அமைத்த சிற்பங்களைப் பாருங்கள்: கல்லைக் கொண்டு வியக்கத்தக்க உருவங்களை நுட்பவேலைப்பாட்டுடன் அமைப்பது எளிதான செயலன்று. நாகரிகத்தில் மிகவுயர்ந்த மக்களால்தான் அவற்றைச் செய்ய முடியும். ஆதலின் அவை நம் முன்னோருடைய சிற்பக்கலைப் புலமையையும் அக்காலத்தில் சிற்பக் கலை பெற்றிருந்த சிறப்பையும் அறிவிப்பனவாகும். மஹாபலிபுரத்துச் சிற்பங்கள், அஜந்தாக் குகைச் சிற்பங்கள் முதலியன உலகத்தாரைப் பெரிதும் வியக்கச் செய்கின்றன. சிற்பங்கள் அழியாத பொருள்கள் ஆதலால் நம் நாகரிக வரலாற்றை நன்கு விளக்க உதவுகின்றன.

6. பண்டைக் காலத்தில் காகிதம் இல்லை. மக்கள் பனை ஓலைகளில் எழுதினர்கள்: அவை அழியக்கூடியவை; ஆதலால் கற்களில் எழுத்துக் களை வெட்டினர்கள். அவையே கல்வெட்டுகள் எனப் படும். நாம் ஒவ்வொரு பெரிய கோவிலிலும் சுவர் களில் பல கல் வெட்டுகளைக் காணலாம். அவற்றைக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் படித்து அச்சிட் டுள்ளனர். அவை நம் தமிழ் நாட்டை ஆண்ட

பல்லவர் — சோழர் — பாண்டியர் — சேரர் — விஜய நகரத்து அரசர் முதலியவர்கள் காலத்தவை. அவற்றிலிருந்து அக்கால மக்கள் பழக்கவழக்கங்கள், கல்விநிலை முதலியனவும் அரசர்களைப்பற்றிய பல செய்திகளும் தெரிகின்றன. அச்செய்திகள் நாட்டு வரலாறு எழுதப் பெருந்துணை செய்கின்றன.

7. மேற்சொன்ன அனைத்தும் நம் பழைய வரலாற்றுக்குத் துணை புரிவன் ஆதலால் அவை நம் வரலாற்றுச் சின்னங்கள் ஆயின. அவை நம் முன்னோருடைய பழமையையும் பெருமையையும் நமக்கும் உலகத்தார்க்கும் தெரிவிப்பவை; 'நம் நாடு பழையது நாகரிகத்தில் உயர்ந்தது' என்று நம்மைப் பேசச் செய்பவை. ஆதலால் அவற்றைப் பாதுகாப்பது நமது கடமையாகும். அவற்றை மேலும் ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டறிவதும் நமது பொறுப்பாகும்.

அரும்பொருள்

சின்னம் - அடையாளம். புலமை - அறிவு. கலை - அறிவுப்பயன், சாத்திரம். அஜந்தா - ஐதராபாத் நாட்டில் உள்ள ஓர் இடம்.

பயிற்சி

I. விடை கூறு :—

1. புதைபொருள்கள் நம் வரலாற்றுச் சின்னங்கள் ஆகும்—எப்படி?

2. தஞ்சைப் பெரிய கோவில் உலகத்திற்கு எவற்றை உணர்த்துகிறது?

3. தாஜ்மஹால் யாரால், ஏன் கட்டப்பட்டது? அது எதனை அறிவிக்கிறது?

4. திருமலை நாயக்கர் மஹாலும், தஞ்சை அரண்மனையும் தெரிவிப்பன யாவை?

5. ஓவியங்கள் எவற்றை உணர்த்துகின்றன ?

6. சிற்பங்கள் சிறந்தவை—எப்படி ?

7. கல்வெட்டுகள் என்பன யாவை ?

8. அவை நாட்டுவரலாறு எழுதப் பெருந்துணை செய்கின்றன.—எப்படி ?

II. 1. இப்பாடத்தின் ஒவ்வொரு பத்தியையும் படித்துத் தலைப்புக் கொடு.

2. இரண்டாம் பத்தியில் உள்ள எ. ப. செ. கூறு.

3. மூன்றும் பத்தியில் உள்ள பெயரெச்ச-வினையெச்சங்களைச் சொல்.

4. படைத்தவர், கட்டடம், இராஜராஜன், தாஜ் மஹால் (பெண்மணியின் பெயர்), சிற்பங்கள் — இவை எவ்வெப்பாற் சொற்கள் ?

5. அறிவு, கட்டடம், ஷாஜஹான், வெண்மை, நூற்றுண்டு, வருதல், தலை.—இவை என்னென்ன பெயர்ச் சொற்கள் ?

6. வெட்டினர், ஆண்டனர், விளக்கினன், பேசுகிறன், உதவுகின்றன, சென்றது—பகுதி, விகுதி, இடைநிலை கூறு.

7. மேல் வந்தவை எவ்வெப்பால் வினைமுற்றுக்கள் ?

8. ஆரும் பத்தியில் உள்ள வினைமுற்றுக்களை எதிர்மறை வினைமுற்றுக்கள் ஆக்கு.

23. உழைப்பும் உயர்வும்

1. ‘உழைப்பே உயர்வு அளிக்கும்’ என்பது நம் நாட்டுப் பழமொழி. இது எந்த நாட்டிற்கும் பொதுவான பழமொழியே ஆகும். நீ மேனாட்டுப் பெருமக்களுடைய வரலாறுகளைப் படித்தால் உழைப்பு அளிக்கும் உயர்வினை நன்கறியலாம்; சிலர் வரலாறுகளை இங்குப் படி.



ஸ்டாலின் மாக்டொனல்டு

2. ருஷியாவின் தலைவராயுள்ள **ஜோசப் ஸ்டாலின்** என்பவர் பல சிறிய கைத்தொழில்களைச் செய்தவர்; அத்தொழில்களைச் செய்துகொண்டே பல நாட்டு அரசியல் நூல்களைப் படித்துத் தம் அறிவைப் பெருக்கிக் கொண்டார்; அரசியல் கிளர்ச்சியில் ஈடுபட்டார்; சிறைத் தண்டனை அடைந்தார்; இறுதியில் ருஷிய நாட்டின் அரசாங்கத் தலைவரானார். அவரது ஆட்சியில் குடிகள் இன்பமாக வாழ்கின்றனர்; அவரை மனமார வாழ்த்துகின்றனர்.

3. இராம்ஸே மாக்டொனல்டு என்பவர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முதல் அமைச்சராய் இருந்தார். அவர் மீன் பிடித்துப் பிழைத்து வந்தவர்; தம் ஓய்வு நேரங்களில் அரசியல் நூல்களைப் படித்துத் தொழிலாளர் கட்சியிற் சேர்ந்தார்; தம் இடைவிடா உழைப்பால் தொழிலாளர் கட்சியைப் பலப்படுத்தினர்; தாமே அதன் தலைவரானர்; தேர்தலில் நின்று வெற்றி பெற்று, முதல் அமைச்சரானர். அவர் மூன்று முறை முதல் அமைச்சராய் இருந்தார்.

கமால் பாஷா ஏப்ரஹாம் லிங்கன்

4. துருக்கிநாடு முப்பது ஆண்டுகளுக்கு முன் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தது. அப்பொழுது **காமல் பாஷா** என்பவர் ஒரு போர் வீரராய் இருந்தார். அவர் தம் போர்த் திறனைக் காட்டிப் படையில் செல்வாக்குப் பெற்ருர்; தம் தாய் நாட்டை நன்னிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்கு ஒரு கட்சியை அமைத்தார்; பின்னர் மன்னரை அப்புறப்

படுத்தித் துருக்கி அரசாங்கத் தலைவரானுர். அவர் தம்நாட்டில் செய்த சீர்திருத்தங்கள் மிகப்பல. அவர் பெண்களுக்குக் கல்வி அளித்தார்; அனைவர்க்கும் போர்ப் பயிற்சி அளித்தார்; பயிர்த்தொழில், கைத் தொழில்களை வளர்த்தார். தம்மை வாழ்விக்க வந்த தந்தையார் என்று குடிமக்கள் அவரைப் பெரிதும் பாராட்டினர்.

5. **ஏப்ரஹாம் லிங்கன்** என்பவர் ஒரு சிறிய கிராமத்தில் ஏழைக் குடும்பத்திற் பிறந்தவர். அவர் கரி தள்ளும் அகன்ற கரண்டியில் எழுதிப் படித்தவர். அவர் தம் முற்சியால் பல நூல்களைப் படித்துத் தம் அறிவைப் பல துறைகளில் வளர்த்தார்; படகு ஓட்டும் தொழிலாளியாய் இருந்தார்; கிராம அஞ்சல் நிலையத் தலைவராய் இருந்தார்; பிறகு தம் மாகாணச் சட்டசபை உறுப்பினர் ஆனுர். அவர் ஒழுக்கம் மிக்கவர்; சிறந்த பேச்சாளர். அவருடைய நற் குணங்களைக் கண்ட அமெரிக்கர் அவரை அமெரிக்க நாட்டுக் குடியரசுத் தலைவராய்த் தேர்ந்தெடுத்தனர். குடிசையிற் பிறந்த ஏழை லிங்கன் தம் இடைவிடா முயற்சியால் படிப்படியாக உயர்ந்து இணையற்ற தலைவர் பதவியை அடைந்தார். இது உழைப்பு அளித்த உயர்வு!

6. குழந்தாய், நீ இவர்கள் வரலாறுகளை நினைவில் வை. இவர் போல உழைப்பால் உயர்வடைந்த பெருமக்கள் மிகப்பலர். நீ அவர்கள் வரலாறுகளை யும் படி. இவர்கள் வெற்றியின் இரகசியம் என்ன? **தன்னம்பிக்கை** விடாமுயற்சி, **சலிப்படையாத உள்ளம்** இவையே வெற்றிக்குக் காரணம். இவை உன்னிடத்தில் இருக்கவேண்டும். உன் சாதியைப் பற்றியோ-மதத்தைப் பற்றியோ கவலைப்

படாதே ; உன் ஏழ்மையைப் பற்றிக் கவலேப்படாதே ; நன்ருய்ப் படி ; மனத்தைச் சிதறவிடாதே ; விடா முயற்சியுடன் வேலே செய் ; துன்பங்களே மகிழ்ச்சி யோடு ஏற்றுக்கொண்டு வேலே செய் ; தன் னம்பிக்கையை இழவாதே. வெற்றி உன்னேத் தேடி வரும். நீ வாழ்வில் சுகம் பெறுவாய்.

முயன்ருல் முடியாதது உண்டா ?

அருஞ்பொருள்

அளிக்கும் - கொடுக்கும். கிளர்ச்சி - போராட்டம். செல்வாக்கு - உயர் மதிப்பு. துறை - வழி. பேச்சாளர் - பேசுந்திறமை பெற்றவர். குடியரசு - குடிகளே நாட்டை ஆளுதல். தன்னம்பிக்கை - தன்னிடத்தில் நம்பிக்கை. சலிப்பு - தளர்ச்சி, வெறுப்பு. இழவாதே - இழக்காதே.

பயிற்சி

I. விடை கூறு :—

1. ஜோசப் ஸ்டாலின் யார்? அவர் பெற்ற வெற்றி யாது ?

2. மாக்டொனல்டு யார் ? அவர் எவ்வாறு உயர் வடைந்தார் ?

3. கமால் பாஷா எப்படி உயர்வடைந்தார் ?

4. லிங்கன் எவ்வாறு குடியரசுத் தலேவரானர் ?

5. இவர்கள் வெற்றிக்குக் காரணம் என்ன ?

6. நீ உயர்வடைய என்ன செய்ய வேண்டும் ?

II. 1. தொழிலாளி, பெருக்கி, வாழ்தல், இன்பம் தாழ்ந்த, சாதாரணம், குடியரசு—எதிர்ச்சொற்களேக் கூறு.

2. படிப்படியாக, உழைப்பு, உயர்வு, சலியாவுள்ளம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

3. ஒவ்வொரு பத்திக்கும் ஏற்ற தலேப்புக் கொடு.

4. இப்பாடப்பொருளே ஒரு கட்டுரையாக எழுது.



24. வாழ்க்கையில் வெற்றி

1. 'மக்களை வாட்டும் அடிமைத்தனத்தை அமெரிக்காவிலிருந்து விரட்டுவேன்' என்று ஏழைச் சிறுவரான ஏப்ரஹாம் லிங்கன் மனவுறுதி கொண்டார்; அதைக் கருத்தில் வைத்துச் சட்ட சபைக்குச் சென்றார்; பல கூட்டங்களிற் பேசிப் பொதுமக்கள் கருத்தைக் கவர்ந்தார்; இறுதியில் அமெரிக்க அரசாங்கத் தலைவரானார்; தாம் இளமையில் கொண்ட விரதத்தை (அடிமைத்தனத்தை ஒழித்தல் என்பதை)ச் சட்டமூலம் நிறைவேற்றினார்; அந் நற்செயலால் உலகில் அழியாப் புகழ் பெற்றார்.

2. இங்ஙனம் குறிக்கோள் ஒன்றை மனத்தில் வைத்து அதைப்பெற இடைவிடாது முயன்று வெற்றி காண்பவரே வாழ்க்கையில் வெற்றி பெறுபவர் ஆவர். அப்பெருமக்கள் வாழ்க்கை வரலாறுகளே பிள்ளைகள்

வாழ்வைச் செம்மைப்படுத்துவனவாகும். வாழ்க்கையில் வெற்றி கண்ட பெரியார் பலர். அவருள் தம் இந்திய நாட்டார் சிலர்; அவருள்ளும் நம் தமிழ் நாட்டார் மிகச் சிலர். அம்மிகச் சிலருள் ஒருவரே **டாக்டர் சர் ஆ. இலக்குமணசுவாமி முதலியார்** என்பவர்.

3. இலக்குமணசுவாமி முதலியார் ஆர்க்காட்டு முதலியார் மரபில் வந்தவர். அவர் மருத்துவக்கலை மாணவராயிருந்த பொழுது, "என் வாழ்நாளில் நமது நாட்டில் மருத்துவக் கல்வியையும் பொதுக் கல்வியையும் வளர்க்கப் பாடுபடுவேன். இதுவே என் வாழ்க்கைக் குறிக்கோள்" என்று தமக்குள் உறுதி செய்துகொண்டார்.

4. முதலியார் பி. ஏ. பட்டம் பெற்றவர்; டாக்டர் பட்டமும் பெற்றவர். அவர் சென்னை—மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராய் இருந்தார்; எழும்பூர் — பிள்ளைப்பேற்று மருத்துவ நிலையத்தின் மேற்பார்வையாளராய் இருபத்தைந்தாண்டுகள் இருந்தார்; 'பிள்ளைப்பேறு சம்பந்தமான மருத்துவத் துறையில் இணையற்றவர்' என்று மாகாணத்தில் பெர் பெற்றார்; அத்துறைபற்றிய விரிவான நூல் ஒன்றையும் எழுதி வெளியிட்டார். அந்நூல் இன்று உலக மருத்துவர் அனைவராலும் பாராட்டப்படுகின்றது. மருத்துவம் சம்பந்தமாய் முதலியார் செய்துள்ள தொண்டுகள் அளவிடற்கரியன. அவற்றை அவர்தம் வரலாற்று நூலில் விரிவாகக் காணலாம்.

5. உயர்தரக் கல்வி கற்பிக்கும் பள்ளிகள் **கல்லூரிகள்** எனப்படும். அவை மருத்துவக் கல்லூரி, சட்டக் கல்லூரி, கால் நடை மருத்துவக்

கல்லூரி, எஞ்சினீயரிங் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி, பயிர்த்தொழில் கல்லூரி, கலைக்கல்லூரி, தொழிற் கல்லூரி எனப் பலவகைப்படும். நமது மாகாணத்தில் இக்கல்லூரிகள் பல இருக்கின்றன. அவற்றினை மேற்பார்த்தல், புதிய கல்வித் துறைகளை வகுத்தல், அத்துறைகளில் புதிய தேர்வுகளை வைத்துப் பட்டங்கள் வழங்கல் முதலிய பணிகளைச் செய்ய ஒரு கழகம் உண்டு. அது **பல்கலைக் கழகம்** எனப்படும். அது ஒவ்வொரு மாகாணத்திலும் இருக்கின்றது.

6. முதலியார் நமது சென்னைப் பல்கலைக் கழகத்தில் பதினெட்டு ஆண்டுகள் ஆட்சிக் குழு உறுப்பினராய் இருந்தார்; பின்னர்ப் பல்கலைக் கழகத் தலைவராய் ஆறு ஆண்டுகள் வேலை பார்த்தார்; இப்பொழுது மூன்றும் முறையும் தலைவராய்த் தேர்ந் தெடுக்கப்பெற்று, அவ்வேலையைப் பார்த்து வரு கின்றார். முதலியார் தலைவராய் வந்த பிறகு பல புதிய கல்லூரிகள் ஏற்பட வசதி அளித்தார்; தமிழில் பல புதிய பட்டத் தேர்வுகளை ஏற்படுத்தினார்; இசை, மருத்துவம், பத்திரிகைக் தொழில், கைத்தொழில் முதலியவற்றில் புதிய தேர்வுகளையும் பட்டங்களையும் ஏற்படுத்தினார்.

7. அவரது மருத்துவப் பெரும் புலமையையும் கல்வித்துறையில் அவர் செய்துள்ள முன்னேற்றச் செயல்களையும் பாராட்டி இந்திய அரசாங்கமும் சென்னை அரசாங்கமும் மருத்துவத் துறையிலும் கல்வித்துறையிலும் அவரது யோசனையைக் கேட்டு வருகின்றன. முதலியார் உலகப் பல்கலைக் குழுவில் உறுப்பினராயிருந்தும் மருத்துவக் குழுவில் உறுப்பி னராயிருந்தும் தொண்டு புரிந்துவருகின்றார். அவர்

பல முறை இங்கிலாந்திற்கும் அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்கும் சென்று மருத்துவ மாநாடுகளிலும் கல்வி மாநாடுகளிலும் பேசியுள்ளார். அமெரிக்காவும், இங்கிலாந்தும் அவரது மருத்துவப் புலமையைப் பாராட்டி அவரைத் தங்கள் மருத்துவக் கழக உறுப்பினராய் ஏற்றுக்கொண்டன. வேறு பல்கலைக் கழகங்கள் பல அவருக்குப் பல பட்டங்களை வழங்கி மகிழ்ந்தன.

8. முதலியார் மாணவராயிருந்த பொழுது கொண்ட குறிக்கோளைத் தம் இடைவிடா உழைப்பால் வாழ்க்கையில் நிறைவேற்றிவிட்டார். இப்பொழுது அவருக்கு வயது அறுபத்து மூன்று. இந்த வயதிலும் அவர் இந்தியநாட்டின் சார்பாகவும் நமது மாகாணச் சார்பாகவும் மேனுடுகளில் நடக்கும் பல மாநாடுகளில் கலந்து தொண்டாற்றுகிருர்; நமது மாகாணக் கல்வி வளர்ச்சிக்கும் மருத்துவ வளர்ச்சிக்கும் இடையருது வேலை செய்துவருகின்ருர். நமது மாகாண மேல் சட்டசபையில் உறுப்பினராயிருந்து தொண்டு செய்கிருர். அரசாங்கம் அவரது பெருந்தொண்டினைப் பாராட்டி, இராவ்பஹதூர், திவான்பஹதூர், சர் முதலிய பட்டங்களை அளித்துப் பெருமைப் படுத்தியது.

9. முதலியாரது வரலாறு உங்களுக்கு ஊக்கம் அளிக்கத்தக்கது. நீங்கள் ஒவ்வொருவரும் அவரைப் போல வாழ்க்கையில் ஒரு குறிக்கோளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்; நன்ருய்ப் படித்து, உங்கள் குறிக்கோளுக்கு ஏற்ற துறையில் புகுந்து, ஊக்கத்துடன் வேலை செய்யவேண்டும்; அவரைப் போல நாட்டு நலனுக்கும் மக்கள் உயர்வுக்கும் பாடுபட

வேண்டும். இளைஞர்க்கு முன்மாதிரியாக இருந்து வரும் டாக்டர் முதலியார் நீண்டநாள் இருந்து, நாட்டுக்கு நலன் விளைக்குமாறு செய்ய, நாம் இறைவனை வேண்டுவோமாக!

அரும்பொருள்

குறிக்கோள் - கொள்கை, திட்டமான நோக்கம். மரபு - பரம்பரை. பிள்ளைப்பேறு - பிரசவம், பிள்ளை பெறுதல். குழு - கூட்டம். மாநாடு - அறிஞர் பலர் பேசும் பெரிய சபை. இறைவன் - கடவுள்.

பயிற்சி

I. விடை கூறு :

1. ஏப்ரஹாம் லிங்கன் கொண்ட குறிக்கோள் யாது?
2. அவர் அதனை எங்ஙனம் நிறைவேற்றினர் ?
3. வாழ்க்கையில் வெற்றி பெறுபவர் யாவர் ?
4. முதலியார் கொண்ட குறிக்கோள் யாது ?
5. அவர் மருத்துவத் துறையில் செய்த தொண்டு யாது ?
6. அவர் கல்வித் துறையில் செய்த முன்னேற்றச் செயல்கள் எவை ?
7. பல்கலைக் கழகம் என்பது யாது ?
8. முதலியார் எந்தெந்த நாடுகளைப் பார்வையிட்டார்?
9. அவர் உலகப் புகழ்பெறக் காரணம் என்ன ?
10. அவரது வரலாறு உங்களுக்கு உணர்த்துவது யாது ?

II. 1. பெருமக்கள், குறிக்கோள், அளவிடற்கரிய, வரலாற்று நூல், கல்லூரி, பல்கலைக் கழகம், முன்மாதிரி— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.

2. இப்பாடத்தின் முதற் பத்தியில் உள்ள எ. ப. செ. கூறு.

3. இரண்டாம் பத்தியில் உள்ள வினைமுற்றுக்களுக்குக் காலங்கள் கூறு.



25. வீரத் தமிழ்ப்பெண்மணி

(நாடகம்)

காட்சி 1

இடம் : வீரன் வீடு
நேரம் : காலை
பாத்திரங்கள் : வீரனும் அவன் மனைவியும்

வீரன் :—பெண்ணே, நமது பாண்டிய நாட்டின்மீது சேரன் படையெடுத்து வந்திருக்கிறான். வீட்டுக்கொருவீரன் புறப்பட்டுப்படையில் சேரவேண்டும் என்பது நம் அரசன் ஆணை.

மனைவி :—காதலரே, அச்சேரன் என்ன, வெறியனா? அடிக்கடி நம் நாட்டின்மீது படையெடுத்து வருகிறானே! சென்ற முறை அவன் வந்த போது கடும்போர் நடந்தது. என் தந்தையும் தமையன்மாரும் அப்போரில் மாண்டனர்.

வீரன் :—அதனால்.........

மனைவி :—அதனால் நான் கவலைப்படவில்லை. நம் நாட்டிற்காக நாம் உயிரைவிடத் தயாராயிருக்க வேண்டும். எனக்கு அரசன் அனுமதி கொடுத்தால் நானும் வந்து போர் புரிவேன். நமது மறக்குடி போருக்கு அஞ்சுவதில்லையே !

வீரன் :—கண்ணே, நான் போருக்குப் போகிறேன்! வெற்றி பெற்றால் மீள்வேன் ; இன்றேல் களத்தில் ஆவி துறப்பேன். நான் இறந்த பிறகு நீ என்ன செய்வாய் ?

மனைவி :—நீர் முதுகில் காயம் படாது மார்பில் காயம் பட்டு இறந்தால் நான் மகிழ்வேன் ; நீர் வெற்றி பெற்று வருவதை விரும்புகின்றேன் ; ஒருவேளை நீர் இறப்பீராயின், நமது செல்வ மகனை பதினாறு வயதுடைய இளைஞனைப் போருக்கு அனுப்புவேன்.

வீரன் :—என் உயிரே, உன் நாட்டுப் பற்றைப் பாராட்டுகின்றேன். புலிக்குப் பிறந்தது பூனை ஆகாதன்றோ ? நான் சென்று வருகிறேன்.

(வீரன் விடை பெற்றுப் போதல்)

[அவன் போரில் கடுமையாய்ப் போரிட்டு இறுதியில் பகைவர் வேல் மார்பிற் பாய்ந்து இறந்தான். அது கேட்ட வீரப் பெண்மணி மகிழ்ந்தாள். தன் மகனுக்குப் போர் உடை தரித்துப் பேசுகின்றாள்.]

காட்சி 2

வீரத்தாய் :—என் செல்வ மகனே, நமது தாய் நாடாகிய பாண்டி நாட்டின்மீது சேரன் படையெடுத்து வந்திருக்கிறான் ; உன் தந்தையார் நாட்டைக் காக்கச் சென்று போரில் இறந்தார் என்பன நீ அறிந்த செய்திகளே அல்லவா ?

இப்பொழுது நீ சென்று தாய் நாட்டுக்காகப் போர் புரி. உனக்குப் போர் புரிதல் விருப்பத்தைத் தருமா?



மகன் :—அம்மா நான் மறவர் குடியினன்; மறக் குடியிற் பிறந்த உமது மகன்; நேற்றுப் போரில் இறந்த வீரன் மகன்; முன்னர் நடந்த போரில் உயிர்விட்ட உம் தமையன்மார்க்கு மருகன். நான் பிறந்தது முதல் வாள், ஈட்டி, வேல் இவற்றுடன் விளையாடிப் பழகினவன். போர் எனக்கு விளையாட்டுப் போன்றது. மேலும் நான் பிறந்த நாடு ஆபத்தில் இருக்கும் பொழுது, அதைக் காக்க முனைவது எனது கடமையாகும். நீர் இன்று என்னை அனுப்பாவிடில், நாளை நான் போர்க்களம் செல்லலாம் என்று இருந்தேன். நீர் என்னை ஆசி கூறி அனுப்பும். என்னால் இயலும் வரை போர் புரிந்து உயிர் இருப்பின் மீள்வேன்; இன்றேல் களத்தில் மடிவேன்.

வீரத்தாய் :—(மகிழ்ச்சிக் கண்ணீர் விட்டுத் தன் தவ மைந்தனைத் தழுவி) என் செல்வமே, நீ ஒருவனே இப்பொழுது நமது குடிக்கு ஆண் மகன். நான் உன் தாய் நாட்டுப் பற்றினைப் பாராட்டுகிறேன். நமது மறவர் குடிக்கு உன்னால் புகழ் உண்டாகட்டும். இளஞ் சிங்கமே, சென்று வா.

(மகன் தாயைப் பணிந்து செல்லல். தாய் அவன் மறையுமட்டும் அவனையே பார்த்து நிற்றல்.)

காட்சி முற்றிற்று

அரும்பொருள்

ஆணை - கட்டளை. காதல் - அன்பு. காதலரே - அன்பரே. வெறியன் - பித்தம் பிடித்தவன். கடும்போர் - கொடிய போர். அனுமதி - சம்மதம். மறக்குடி - வீரக்குடி. மறவன் - வீரன். கண்ணே - கண் போன்றவளே. புரி - செய். இன்றேல் - இல்லாவிடில். ஆவி - உயிர். மருகன் - மருமகன். முனைவது - முற்படுவது. களம் - போர்க்களம்.

பயிற்சி

I. 1. வீரப் பெண்மணியைப் பற்றிய உனது கருத்தைப் பதினைந்து வரிகளில் எழுது.

2. அவள் கணவனைப் பற்றி நீ நினைப்பதைப் பத்து வரிகளில் எழுது.

3. அவள் மகனைப் பற்றிய உனது கருத்தைப் பதினைந்து வரிகளில் வரை.

II. 1. 'நெப்போலியனும் பழக்காரியும்'—இப்பாடத்தை இரண்டு காட்சிகளாக எழுது.

2. 'அறிவு நுட்பம்' என்னும் கதையை இரண்டு காட்சிகளாக எழுது.

III. ஒரே பொருள் கொண்ட பழமொழிகளைக் கண்டு பிடித்துச் சொல் :—

முதல் வரிசை

(1) பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
(2) கழுதை அறியுமா கற்பூர வாசனை ?
(3) எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
(4) பல துளி பெரு வெள்ளம்.
(5) கோவில் பூனை தேவருக்கு அஞ்சாது.

இரண்டாம் வரிசை

(1) அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
(2) நாலு செத்தை ஒரு கற்றை.
(3) பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது.
(4) சட்டுவம் அறியுமா கறிச்சுவை ?
(5) படுக்கப் படுக்கப் பாயும் பகை.

செய்யுட் பாடம்

I. நீதிப்பகுதி

1. வாக்குண்டாம்

மானமுடையவர் இயல்பு

1. உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ ?—கற்றூண்
பிளந்(து) இறுவ(து)அல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

உருவம் கண்டு மதிப்பது தவறு

2. அடக்கம் உடையார் அறிவிலர்என்(று) எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா ;—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

கயவர் - சான்றோர்

3. கற்பிளவோ(டு) ஒப்பர் கயவர் ; கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ(டு) ஒப்பாரும் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீர்ஒழுகு சான்றோர் சினம்.

மேன்மக்கள் வறுமையிலும் மேன்மக்களே

4. சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடா(து); ஆதலால்—தந்தம்
தனம்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கெட்டால்
மனம்சிறியர் ஆவரோ மற்று.

அறிவுடையோர் செயல்

5. சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம்அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் ;—மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

—ஔவையார்

அரும்பொருள்

1. உற்ற - தகுந்த. பற்றலர் - பகைவர். இறுவது - ஒடிவது. தான் - அசை.

2. அடக்கம் - தன்னிடமுள்ள சக்திகளைக் காட்டாமல் மௌனமாக இருப்பது. கடக்க - வெல்ல. மடை - வயலில் நீர் பாயும் வழி. உறு மீன் - பெரிய மீன்.

3. கயவர் - கீழ்மக்கள். சீர் ஒழுகு - பெருமை பொருந்திய.

4. குறடு - கட்டை. தனம் - செல்வம். தார் - ஆரம், மாலை. மற்று - அசை.

5. சாம்தனையும் - சாகும் வரையிலும். ஆம்தனையும் - ஆகும் வரையிலும். குறைக்குந்தனையும் - வெட்டும் வரையிலும். கண்டீர் - அசை.

2. நல்வழி

நல்ல குடிப்பிறந்தார் இயல்பு

1. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து.

இழிந்த வாழ்க்கை

2. பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சை பலசொல்லி இடித்துண்கை ;—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியா(து)
உயிர்விடுகை சால வுறும்.

நிலையுள்ள அறம் செய்க

3. ஆறிடு மேடும் மடுவும்போ லாம்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் !—சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து.

உணரும் திறமை உடையவர்

4. பூவாதே காய்க்கும் மரமுமுள ; மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே ;—தூவா
விரைத்தாலும் நன்ருகா வித்தெனவே பேதைக்(கு)
உரைத்தாலும் தோன்ரு துணர்வு.

தூய மனத்தவர் நலம் பெறுவர்

5. நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தருஞ்சிவந்த தாமரையாள் தான்.

—ஔவையார்

அரும்பொருள்

1. அடி - பாதம். உலகு - உலகத்தவர். ஏற்றவர் - யாசித்தவர். நல்கூர்ந்தார் - வறுமை அடைந்தார். இசைந்து-மனம்வந்து.

2. பேசுங்கால் - சொல்லுமிடத்து. இச்சை - இச்சகம், விருப்பமான சொற்கள். உண்கை - உண்ணுதல். மானம் - பெருமை. அழியாது - கெடாமல். விடுகை - விடுதல்.

3. மடு - பள்ளம். மாறிடும் - குறையும். ஏறிடும் - உயரும். உள் நீர்மை - மனிதத்தன்மை. வீறும் - மேம்படும்.

4. பூவாதே காய்க்கும் மரம் - அத்திமரம். உளும்-உள்ளும். ஏவாதே - 'செய்' என்று ஏவாமல். உணர்வார் - நோக்கத்தைக் குறிப்பால் உணர்பவர். தூவா - தூவி. நன்று ஆகா - நன்கு முளையாத. பேதை - அறிவிலி. உணர்வு - உணரும் தன்மை.

5. நிழல் - வீடு. பொதியும்- மறைக்கும். திரு - செல்வம். சிவந்த தாமரையாள் - இலக்குமி.

3. நீதிவெண்பா

குணம் நோக்கி மதிப்பு

1. தாமரை பொன்முத்துச் சாமரைகோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா—தாமழல்மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே ; நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என் ?

நல்லவர் தொழில்

2. பகைசேரும் எண்ணுன்கு பற்கொண்டே நன்கு
வகைசேர் சுவையருந்து மாபோல்—தொகைசேர்
பகைவரிடம் மெய்யன்பு பாவித் தவரால்
சுகமுறுதல் நல்லோர் தொழில்.

நெருங்கத் தகாதவை—தகாதவர்

3. ஈக்கு விடந்தலையில் ; எய்தும் இருந் தேளுக்கு
வாய்த்த விடம்கொடுக்கில் வாழுமே ;—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே ; துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம்.

விலகுதற்கு உரியவை—உரியவர்

4. கொம்புளதற் கைந்து ; குதிரைக்குப் பத்துமுழம் ;
வெம்புகரிக் காயிரம்தான் வேண்டுமே ;—வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

வெளிவேடம் கண்டு ஏமாறுதே

5. கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு ?—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ ? புகல்.

அரும்பொருள்

1. சாமரை - கவரிமான் மயிர். கோரோசனை - பசுவின் வயிற்றில் அகப்படும் பொருள். மரு - மணமுள்ள. அழல் - நெருப்பு. எள்ளார் - இகழார்.

2. பகைசேரும் - பகையான. தொகைசேர் - பலராகவுள்ள. பாவித்து - மனத்திற் கொண்டு. உறுதல் - அடைதல்.

3. எய்தும் - உண்டாகும். இரும் - பெரிய. பை - பசிய. துர்ச்சனர் - தீயவர்.

4. வெம்பு - கோபம். கரி - யானை. வம்பு - தீமை. செறி - நிறைந்த.

5. பொற்பு - அழகு. ஊறும் - மிகுகின்ற. புண்ணியர் - நல்வினையாளர். புல்லியர் - தீவினையாளர்.

4. சதகத்திரட்டு

(1) கயிலாசநாதர் சதகம்

கல்விச்சிறப்பு

கடலுலகி லுற்றபொரு ளுக்குள்ளே நன்மைதரு
கல்விநிலை பெற்றபொருளாம் ;
கனலினுல் உருகாது ; புனலினுற் கரையாது ;
கள்ளரால் திருடொணுது ;
திடமான ராசாதி ராசரா லுமதைத்
தீண்டிச் சிதைக்கொணுது ;
செயல்மிக்க மாதரால் சேதமா காதொருவர்
செலவிடினும் குறைவுருதங்(கு)
அடமிகு சகோதரர்க் கிடமது கொடாததனை
அளவிடவு முடியாதுகாண் ;
அப்பொரு ளினைப்பெரு திப்புவியி லலைகின்ற
அற்பருறுபயனென் கொலோ !
கடகயம் உரித்துடலி னிற்றரித் திடுதேவ !
கற்பகவி ராசமேவுங்
கங்கைபுனை யீசனே ! மங்கைமகிழ் நேசனே,
கயிலையங் கிரிவாசனே !

—சிதம்பரம் பிள்ளை

அரும்பொருள்

கனல் - தீ. புனல் - நீர். தீண்டி - தொட்டு. சிதைக்க - அழிக்க. ஒணுது - முடியாது. மாதர் - பெண்கள். சேதம் - அழிவு. அடம் - பிடிவாதம். அற்பர் - கீழானவர். உறு - பெறும். கடகயம் - மதயானை. மேவும் - பொருந்திய. புனை - அணிந்துள்ள. மங்கை - பார்வதி.

(2) திருவேங்கட சதகம்

பயன் தராதவை

சந்திரன் இலாஇரவு, மதுரமில் லாதகவி,
தனயரில் லாதசெல்வம்,
சற்சனர் இலாதவூர், புரவியில் லாதபடை,
தளபதிஇல் லாதசேனை,
பைந்தொடி யிலாதமனை, பாடலில் லாவோசை,
பத்தியில் லாதபூசை,
பார்த்திப ரிலாதபட் டணம், யூக மந்திரிகள்
பற்பல ரிலாதவரசு,
கந்தமில் லாதமலர், சத்தியமில் லாதவாய்,
கல்வியில் லாததேகம்,
கனவினய மில்லா நியோகி, சுசி யில்லாத
கன்மம், உப தேசமில்லா
மந்த்ரமிதை வித்வசன மில்லாத சபைஎன்பர் ;
மனவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே !
வரதவேங் கடராயனே !

—நாராயண பாரதியார்

அரும்பொருள்

மதுரம் - இனிமை. தனயர் - பிள்ளையர்கள். சற்சனர் - நன்மக்கள். புரவி - குதிரை. தளபதி - சேனைத்தலைவன். பைந்தொடி - பசியவளையல்களை அணிந்த மனைவி. பக்தி - அன்பு. பார்த்திபர் - அரசர். யூகம் - அறிவு. கந்தம் - வாசனை. வினயம் - மரியாதை. நியோகி - தவசி. சுசி - சுத்தம். கன்மம் - காரியம். வித்வசனம் - கற்றவர். உறை - வசிக்கும். வரத - அருளுகின்ற

(3) அறப்பளீசுர சதகம்

குறைவுற்றும் குணம் கெடாதவை

தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினும்
சார்மணம் பழுதாகுமோ ?
தக்கபால் சுவறிடக் காய்ச்சினும் அதுகொண்டு
சாரமது ரங்குறையுமோ ?
நிறைபட்ட கதிர்மணி யழுக்கடைந் தாலுமதன்
நீள்குண மழுங்கிவிடுமோ ?
நெருப்பிடை உருக்கினும் அடிக்கினும் தங்கத்தின்
நிறையுமாற் றுங்குறையுமோ ?
கறைபட்ட பைம்புயல் மறைத்தாலும் அதுகொண்டு
கதிர்மதி கனம்போகுமோ ?
கற்றபெரி யோர்மகிமை அற்பரறி கிலரேனும்
காசினி தனிற்போகுமோ ?
அறிவுற்ற பேரைவிட் டகலாத மூர்த்தியே !
ஐயனே ! அருமைமதவேள்
அனுதினமு மனதினிலே தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே !

—அம்பலவாணக் கவிராயர்

அரும்பொருள்

தறிபட்ட - அறுபட்ட. சார் - சேர்ந்துள்ள. சார - சார்ந்துள்ள. மதுரம் - இனிமை. கதிர் - ஒளி. மாற்று - மதிப்பு. கறைபட்ட பைம்புயல் - கார்மேகம். மதி - சந்திரன். கனம் - தன்மை. அறிகிலர் - அறியார். காசினி - உலகம். போகுமோ - அறியாமற் போகுமோ. அறிவுற்றபேர் - அறிஞர். சதுரகிரி - கொல்லிமலே.

5. விவேக சிந்தாமணி

மன அடக்கம் வேண்டும்

1. வாழ்வது வந்த போது
மனந்தனில் மகிழ வேண்டா ;
தாழ்வது வந்த தாஞல்
தளர்வரோ தக்கோர் ? மிக்க
ஊழ்வினை வந்த தாஞல்
ஒருவரால் விலக்கப் போமோ ?
ஏழையா யிருந்தோர் பல்லக்(கு)
ஏறுதல் கண்டி லீரோ ?

இரக்கம் வேண்டும்

2. கலைஎலாம் உணர்ந்தா ரேனும்
கரிசறத் தெளிந்தா ரேனும்
மலைஎன உயர்ந்தா ரேனும்
மனமயல் அகன்ரு ரேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க்(கு)
உதவிய கைய ரேனும்
இலகிய இரக்கம் இன்றேல்
எழுநர கடைவர் அன்றே.

அரும்பொருள்

1. தக்கோர் - பெரியோர். தளர்வரோ - மனத் தளர்ச்சி அடைவரோ - (அடையார்). ஊழ்வினை - வினைப்பயன்.

2. கரிசு - சுற்றம். மயல் - மயக்கம். அகன்ருர் - நீங்கினவர். இலங்கிய - விளக்கமுற்ற.

II. கதைப் பகுதி

1. புத்தர் அறிவுரை

புத்தர் அறிவுரை கூறி யாகத்தைத் தடுத்தல்

1. ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கிநீர்
ஆக்கிய யாகத் தவியுணவை
ஈட்டும் கருணை இறையவர் கைகளில்
ஏந்திப் புசிப்பரோ ? கூறுமையா !

2. மைந்தருள் ஊமை மகனை ஒருமகன்
வாளால் அரிந்து கறிசமைத்தால்
தந்தையும் உண்டு களிப்பதுண்டோ? இதைச்
சற்றுநீர் யோசித்துப் பாருமையா !

3. காடு மலையெலாம் மேய்ந்துவந் தாடுதன்
கன்று வருந்திடப் பாலையெல்லாம்
தேடிஉம் மக்களை ஊட்டுவ தும்ஒரு
தீய செயலென எண்ணினீரோ ?

4. மேடையில் நீங்களும் மூடிப் படுத்திட
மெல்லிய கம்பளி தானளித்து
வாடையி லாடிக் கொடுகுவ தும்அதன்
வஞ்சகச் செய்கையோ ? சொல்லுமையா !

5. அம்புவி மீதில்இவ் வாடுக ளும்உம்மை
அண்டிப் பிழைக்கும் உயிரலவோ ?
நம்பி யிருப்பவர் கும்பி எரிந்திடில்
நன்மை உமக்கு வருமோ? ஐயா !

6. காட்டுப் புலியின் கொடுமை யஞ்சிஉங்கள்
கால்நிழல் தங்கிய ஆடுகளை
நாட்டுப் புலியெனக் கொல்லுவ தோஅந்த
நான்மறை போற்றிய நீதி? ஐயா !

7. மண்ணில் வளர்ந்திடும் புல்லையுண் ணும்வான
மாரி பொழிந்திடும் நீரை யுண்ணும்

எண்ணிநீர் செய்யும் உதவியென் ணும்? இதை
ஏனோ உணர்ந்திலீர், மானிடரே!
8. ஆயிரம் பாவங்கள் செய்தவெல் லாம்ஏழை
ஆட்டின் தலையோ டகன்றிடுமோ?
தீயவும் நல்லவும் செய்தவரை விட்டுச்
செல்வ தொருநாளு மில்லை, ஐயா!

—தேசிக விநாயகம் பிள்ளை

அரும்பொருள்

அவி - யாகத்தில் நிவேதிக்கப்பட்ட பொருள். ஈட்டும் - பெறும். ஏந்தி - தாங்கி. சற்று - சிறிதளவு. வாடை - வடக்கிருந்து வீசும் காற்று. ஆடி - அசைந்து. கொடுகுவது - குளிரால் ஒடுங்குவது. அம் - அழகிய. புவி - பூமி. கும்பி - வயிறு. நான்மறை - நான்கு வேதங்கள்; இருக்கு, சாமம், யசுர், அதர்வணம். போற்றிய - கொண்டாடிய. மாரி - மழை. அகன்றிடுமோ - நீங்கிடுமோ? தீய - தீவினைகள். நல்ல - நல்வினைகள்.

2. புலியும் பிராமணனும்

(பஞ்ச தந்திரக் கதை)

1. மூப்புடைப் புலிதான் ஒன்று
மூழ்கியோர் ஏரி யின்கீழ்க்
காப்புடன் தருப்பை தன்னைக்
கையில்வைத் திருக்கும் போது,
நாப்புடை மறைவ லாளன்
நண்ணிஅவ் வழியிற் செல்லக்,
கூப்பிடல் செய்தன் னோனைக்
குறித்தந்தப் புலிதான் கூறும்:
2. "அந்தண, இந்தக் காப்பை
அளிப்பன்நீ வா" என்றோதச்
சிந்தையில் வேட்கை கூர்ந்து
செப்புவான், "புலியா ரேநீர்

வெந்துயர்க் கொலைமாந் தர்க்கு
விளைப்பது விட்டுத் தானம்
எந்தநல் வழியிற் செய்வீர் ?
எனக்கதைக் கூறும்,'' என்றான்.

3. புலியது கேட்டு, " நானே
பூசுரா ! நகமும் பல்லும்
இலன் ; கிழ மானேன் ; பாவம்
இழைப்பது விடுத்து நாளும்
பொலிதரு தானஞ் செய்கை
பொருளெனக் கொண்டேன் ; அஞ்சேல் ;
சலமதில் மூழ்கி வந்து
தரும்இதைக் கொடுபோ ", என்ன,

4. நன்றென மறையோன் மூழ்க
நண்ணினன் ஏரி நீரில் ;
அன்றவன் கால்கள் சேற்றில்
அழுந்திடத் திகைத்து நின்றான்.
சென்றது புலி, " நான் உன்னைச்
சேற்றினின் றெடுப்பேன்,'' என்னக்
கொன்றது ; குருதி தன்னைக்
குடித்ததென் றுரைத்த தன்றே.

—வீரமார்த்தாண்டதேவர்

அரும்பொருள்

1. மூப்பு - வயதான. தருப்பை - குசைப்புல். நாப்புடை - நாக்கினில் மறைவலாளன் - வேதத்தில் வல்லவன். நண்ணி - நெருங்கி. கூப்பிடல் செய்து - கூப்பிட்டு.

2. அளிப்பன் - அளிப்பேன். அந்தணா - பிராமணா. சிந்தை - மனம். வேட்கை - விருப்பம். வெந்துயர் - கொடிய துன்பம்.

3. பூசுரா - பிராமணா. பொலிதரு - விளக்கமான. பொருளென - கொள்கையென்று. சலமதில் - தண்ணீரில்.

4. மறையோன் - பிராமணன். திகைத்து - பிரமித்து. குருதி - இரத்தம்.



III. பலசுவைப் பகுதி

1. ஆல்—விழுது—வேர்

தூலம்போல் வார்கி ளைக்கு
விழுதுகள் தூண்கள் ; தூண்கள்
ஆலினைச் சுற்றி நிற்கும்
அருந்திறல் மறவர் ; வேரோ
வாலினைத் தரையில் வீழ்த்தி
மண்டிய பாம்பின் கூட்டம் ;
நீலவான் மறைக்கும் ஆல்தான்
ஒற்றைக்கால் நெடிய பந்தல்.

—பாரதிதாசன்

அரும்பொருள்

தூலம் - மேற்கூரை நடுவில் உள்ள பெருமரத்துண்டு. திறல்- வலிமை. மறவர் - வீரர். ஆலமரம் - ஒற்றைக்கால் பந்தல் - அதன்கிளை தூலம் ; விழுதுகள் தூண்கள், வீரர் ; வேர்கள் பாம்புக் கூட்டம்.

2. ஆற்று வெள்ளம்

வெள்ளத்தின் தோற்றம்

1. ஒலிஒன்று கேட்டேன். ஓ ஓ
புதுப்புனல் ! பெரிய வெள்ளம்
சலசல என்று பாய்ந்து
வரக்கண்டேன் ; தணல்நி றத்தில்
நிலவொத்த நிறம்க லந்து
நெடுவானின் சுடரும் வாங்கிப்
பொலிந்தது ; கோடை யாட்சி
மாற்றிற்றுப் புரட்சி வெள்ளம்.

உழவர் முயற்சி

2. ஆற்றுவெள் ளத்தைக் காணச்
சிற்றூரார் அங்கு வந்தார் ;
போற்றினர் புதுவெள் ளத்தைப்
புகன்றனர் வாழ்த்து ரைகள் ;

காற்ருகப் பறந்து சென்று
கழனிகள் மடைதி றந்து
மாற்றினுர் வாய்க்கால்; மற்றும்
வடிகாலே மறித்தார் நன்றே.

ஆற்று நடை

3. நோய்தீர்ந்தார்; வறுமை தீர்ந்தார்
நூற்றுக்கு நூறு பேரும்;
ஓய்வின்றிக் கலப்பை தூக்கி
உழவுப்பண் பாட லானுர்.
சேய்களின் மகிழ்ச்சி கண்டு
சிலம்படி குலுங்க ஆற்றுத்
தாய்நடக் கின்ருள் 'வையம்
தழைகவே, தழைக' என்றே.

—பாரதிதாசன்

அரும்பொருள்

தணல் - நெருப்பு. நெடு - நீண்ட. சுடர் - வெளிச்சம், ஒளி. பொலிந்தது - விளக்கமுற்றது. புரட்சி வெள்ளம் - கரை புரண்டு வரும் வெள்ளம். சிற்றூரார் - கிராமத்தார். புகன்றனர் - சொன்னுர்கள். கழனி - வயல். மறித்தார் - தடுத்தார். வறுமை - தரித்திரம். உழவுப்பண் - உழவுப்பாட்டு. சேய்கள் - உழவராகிய பிள்ளேகள். ஆற்றுத்தாய் - ஆருகிய அன்னே. வையம் - உலகம். தழைக - செழிப்படைக.

3. தமிழன் சிறப்பு

1. தமிழன் என்றொரு இனமுண்டு ;
    தனியே அவற்கொரு குணமுண்டு ;
அமிழ்தம் அவனுடை மொழியாகும் ;
    அன்பே அவனுடை வழியாகும்.

2. அறிவின் கடலைக் கடைந்தவனும் ;
    அமிர்தம் திருக்குறள் அடைந்தவனும் ;
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
    பொருந்திய நூல்கள் உரைத்திடுவான்.

3. கலைகள் யாவினும் வல்லவனும் ;
    கற்றவர் எவர்க்கும் நல்லவனும் ;
நிலைகொள் பற்பல அடையாளம்
    நின்றன இன்றும் உடையோனும்.

4. சிற்பம் சித்திரம் சங்கீதம்
சிறந்தவர் அவனினும் எங்கேசொல் !
வெற்பின் கருங்கல் களிமண்போல்
வேலைத் திறத்தால் ஒளிபண்ணும்.

5. மானம் பெரிதென உயிர்விடுவான் ;
மற்றவர்க் காகத் துயர்ப்படுவான் ;
தானம் வாங்கிடக் கூசிடுவான் ;
' தருவது மேல் ' எனப் பேசிடுவான்.

6. உத்தமன் காந்தியின் அருமைகளை
உணர்ந்தவன் தமிழன் பெருமையுடன்
சத்தியப் போரில் கடனறிந்தான்
சாந்தம் தவரு துடனிருந்தான்.

—நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

அரும்பொருள்

அவற்கு - அத்தமிழனுக்கு. மொழி - தமிழ். அமிழ்தம் - இனிமை. பொறி - ஐம்பொறிகள் ; மெய், வாய், கண், மூக்கு, செவி. பொருந்திய நூல்கள் - நீதி நூல்கள். நிலைகொள் - நிலைபெற்ற. வெற்பு - மலை. வெற்பின்...பண்ணும் - பாறைகளைச் செதுக்கி உருவங்களை அமைத்த திறத்தைப் பாராட்டுகிருர். துயர்ப்படுவான் - தான் துன்பப்படுவான். தமிழன் - பிறர்க்குக் கொடுப்பவனே தவிரத் தானம் வாங்குபவன் அல்லன். கடன் - கடமை. சாந்தம் - அமைதி.

4. ஆற்றங்கரை நிலவில்

1. ஆற்றங் கரைதனிலே—இருள்
அந்தியி லேகுளிர் தந்த நிலாவினில்,
காற்றிலுட் கார்ந்திருந்தேன் ;—வெய்யிற்
காலத்தின் தீமை இல்லாததி னுல்அங்கு
வீற்றி ருந்தார் பலபேர் ;—வந்து
மேல்விழும் தொல்லே மறந்திருந் தார் ;—பழச்
சாற்றுச் சுவைமொழியார்—சிலர்
தங்கள் மணுளரின் அண்டை யிருந்தனர்
(ஆற்றங்கரைதனிலே)

2. நாட்டின் நிலேபேசிப்—பல
நண்பர்கள் கூடி இருந்தனர் ஓர்புறம்
ஓட்டம் பயின்றிடுவார்—நல்ல
ஒன்பது பத்துப் பிராயம் அடைந்தவர் ;

கோட்டைப் பவுன் உருக்கிச்—செய்த
குத்து விளக்கினைப் போன்ற குழந்தைகள்
ஆட்ட நடை நடந்தே—மண்ணை
அள்ளுவர், வீழுவர் அம்புலி வேண்டுவர்.
(ஆற்றங்கரைதனிலே)

3. புனலும் நிலா வொளியும்—அங்குப்
புதுமை செய்தே நெளிந்தோடும்; மரங்களில்
இனிது பறந்து பறந்—தங்கும்
இங்கும் அடங்கிடும் பாடிய பறவைகள்;
தனிஒரு வெள்ளிக்கலம்—சிந்தும்
தரளங்கள் போல்வன நிலவு நக்ஷத்திரம்;
புனையிருள் அந்திப் பெண்ணாள்—ஒளி
போர்த்ததுண் டோஎழில் பூத்ததுண் டோஅந்த
(ஆற்றங்கரைதனிலே)
—பாரதிதாசன்

அரும்பொருள்

பழச்சாற்றுச் சுவை - இனிய சுவை. மொழியார் - சொற்களைப் பேசும் பெண்கள். மணாளர் - கணவர். அண்டை - பக்கத்தில். பிராயம் - வயது. வீழுவர் - வீழ்வர். அம்புலி - சந்திரன், வேண்டுவர் - தம்முடன் வந்து விளையாடவேண்டுவர். புனல் - தண்ணீர். நிலா ஒளி - நிலவு ஒளி. வெள்ளிக் கலம் - வெள்ளித் தட்டு, (சந்திரன்). தரளங்கள் - முத்துக்கள், நட்சத்திரங்கள். புனை - பொருந்திய. அந்திப் பெண்ணாள் - அந்தி நேரமாகிய பெண். ஒளி - வெளிச்சம். எழில் - அழகு.

5. மாலைக் கால வருணனை

1. செங்கதிர் வெம்மை தணிந்ததடி ;—வாசத்
தென்றல் உலாவி எழுந்ததடி ;
பொங்கி வருஞ்சோணை மாநதியும்—ஒரு
பொன்னிறம் பெற்றுப் பொலிந்ததடி.

2. முல்லை மலர்ந்து மகிழ்ந்ததடி ;—ஆம்பல்
மூடிய வாயும் திறந்ததடி ;
எல்லை யிலாமலர்ச் சோலையிலே—வண்டும்
இன்னிசை பாடித் திரிந்ததடி.

3. தாயும் இரங்கி வருகுதடி :—கன்றும்
தாவிக் குதித்தோடி செல்லுதடி ;
ஆயும் பொழிலில் பறவையெல்லாம்—அந்தி
அங்காடி போல ஒலிக்குதடி.

—தேசிக விநாயகம் பிள்ளை

அரும்பொருள்

செங்கதிர் - சிவந்த கதிர்களையுடைய சூரியன். தென்றல் - தெற்கிலிருந்து வீசும் காற்று. ஆம்பல் - அல்லி. இன்னிசை - இனிமையான ராகம். இரங்கி - இரக்கம் கொண்டு. ஆயும் - வண்டுகள் மலர்களை (தேனுக்காக) ஆராயும். பொழில் - சோலை. அங்காடி - கடைத்தெரு.

6. வாழ்த்து

உருவமில் இறைவன் ஒருவன் என்றே
அருளிய முகம்மது பெருநபி வாழி !
'நேசி பகைவரை' என்று பேசி
ஆணி அறைந்த மாணிலர் இடத்தும்
இரக்கம் காட்டிப் பரக்கச் சிலுவையில்
நின்ற கிறிஸ்து அன்பு வாழி !
அருளறம் வளர்த்த அருகன் வாழி !
ஒருமையில் நின்று தருமம் உணர்த்திய
சத்திய ஞானப் புத்தன் வாழி !
அமரன் அழகுக் குமரன் வாழி !

—திரு. வி. க.

அரும்பொருள்

இல் - இல்லாத. மாண் + இலர் - உயர் குணம் இல்லாதவர். அருள் + அறம் - கருணை, தரும சிந்தை. அருகன் - சமணர் கடவுள். ஒருமை - மனத்தை ஒருவழிப்படுத்தி. சத்தியம் - உண்மை. ஞானம் - அறிவு. அமரன் - இறப்பு இல்லாதவன். வாழி - இக்கடவுளர் பெருமை வாழ்க.



7. தமிழ்நாட்டு வணக்கம்

தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா ;
அமிழ்தில் இனியதடி பாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

—பாரதியார்

இந்நூலில் வந்துள்ள புதிய சொற்கள்

1. வேங்கடம் - மலையாளம் - வங்கக்கடல் - நாளடைவில் - திருநெல்வேலி - எஞ்சிய - நிலப்பகுதி - மறுசமயம் - துறைமுகம் - கொற்கை - அகில் - ஏற்றுமதி - மெல்லிய - முடியுடை - மூவேந்தர் - இயற்றமிழ் - இசைத்தமிழ் - நாடகத்தமிழ் - பாணர் - கூத்தர் - வேறுபாடு - நிலவுக.

2. சந்தர்ப்பம் - கவனக்குறைவு - உணரும்படி - காலாண்டு - அரையாண்டு - உழைப்பவர் - அறிஞர்.

3. ஐரோப்பியர் - இத்தாலி - சதுர் - குழுவினர் - இராவ்சாஹிப் - வீரமாமுனிவர் - வையாபுரி - ஆராய்ச்சி.

5. செருந்தி - ஆச்சா - இலந்தை - ஈந்து - கொன்றை - பொன்னூசல் - குருந்து - முறித்திடும் - அணுகும் - மாய்க்கும்.

6. பயில்கின்றனர் - உளி - கரடுமுரடு - அமைப்பு - நுண்ணிய - ராவி - மாற்றப்பட்டது - வியந்தோம் - மீண்டோம்.

7. ஆமோதித்தனர் - சமணர் - வச்சிரநந்தி - இனியாவை - இன்னு - ஏறத்தாழ - தோற்றுவித்தவர் - பாண்டித்துரை-திறப்புவிழா-சேதுபதி-முன்னிலை-பிரவேசம் - பண்டிதர் - சம்ஸ்தானம் - செந்தமிழ் - அச்சகம் - நெடுநாள் - காலமானுர் - இன்றளவும் - திருப்பணி - தவப்புதல்வர்.

8. பல்வேறு - பயன்படுத்தலாம் - மாதிரியாக - தரப்படுகின்றன - பயன்படுத்தி - பெருமக்கள் - காஞ்சி - முனைகின்றனர் - வழங்க - இசைகின்ருர் - கந்தசாமி - ஐம்பதினுயிரம் - புண்ணியம் - நினைவூட்டுகிறேம் - ஈடுபடுமாறு - சமூகசேவை - பயிற்சிப்பள்ளி - துறைகள் - அளிக்கப்படும் -

தொழில் நிலையம் - சீரமைப்பு - பிறவற்றிலும் - சலுகை - விரதம் - மலச்சிக்கல் - நரம்பு - உரம் - விஷங்கள் - சிற்றுண்டி - விளக்கம் - பழநியாண்டவர்.

9. அடியற்ற - குறைந்த புலமை - விளம்பரம் - கொள்ளாமை - மங்கி - மறுவேலை - பிடிவாதம் - வெந்த - பணப்பேய் - வட்டி - பின்யோசனை - தாராளம் - அடைக்க - அவதி - நெருக்கம் - தேரை - உவமை - தெளிவாக்க - அம்பு - இருதலைக்கொள்ளி - உடும்பு.

10. உற்ற - வெற்றுரை - புராணம் - நாட்டி - பாரதத் தாய் - பல்லவி - உயிர்நிலை - வாழ்வு கொடுங்கோல் - ஈனம் - ஈர்ந்திடும் - மன்னுயிர் - மானிடர் - போற்றி - திரிபவர்.

11. பௌத்த சமயம் - உருமாறுதல் - பற்றுத - தானம் பொருட்படுத்தல் - அன்றிரவு உதயகுமரன் - துறவு - கொள்கை - அறவணர் - பாட்டன் - வஞ்சி - தவமகள் - கூலவாணிகர் - மிகுதியாக.

12. உழைப்பு - வீரபத்திரர் - வருமானம் - ஆற்றி ஞர் - ஏற்படும் - பறிக்கும்படி - போட்டி - மலர்முகம் - தரகர் - கீழ்வருவன - அண்டாத - நம்பிக்கை - தக்கபடி - கூட்டுறவு - அவ்வப்போது - நுட்பம்.

14. சிற்றூர் - கொட்டில் - இடைவிடாமல் - முன் னேற்றம் - உடையான் - எழில் - தெரிய - கலையுணர்வு.

15. மலைக்குகை - கூட்டு வாழ்க்கை - பிணைத்து - சுள்ளி - பயன்படுத்த - கண்டறி - நீராவி - இன்றுள்ள - பெருந்துணை - நேரக்கொலை - டெலிபோன் கருவி - பதிவா கின்றன - வியப்பூட்டும் - அற்புதம் - பழக.

16. ஆசியா - ஐரோப்பா - ஆப்பிரிக்கா - ஆஸ்திரேலியா - அமெரிக்கா - கொலம்பஸ் - உரியவாகுக - இறுதியில் - மெகலன் - ஜேம்ஸ்குக் - பியரி - அமண்ட்சன் - டேவிட் லிவிங்ஸ்டன் - மங்கோ பார்க் - ஜோசப் தாம்ஸன் - பிஸாரோ - ஸ்பெயின் நாடு.

17. பேரரசர் - நெடுந்தூரம் - விளங்க - கழிந்தன - மெய்க்காவலர் - அறிவாய் - தீர்க்கப்படும் - வாழுலானுள் - அறச்செயல் - நினைவாற்றல்.

18. விருந்து - கலந்து கொள்ள - எதிர் நோக்கி - காத்திரு - தூய - நத்தம் - விளக்கிடுவது - கம்பெனி - செல்லாத - ஒத்துழைத்து - தூய நிலை - குறை கூறு - நம்மூரினர் - இன்ப துன்பங்கள் - பங்கு பெற - விரைவில்.

19. ஒத்துக்கொள் - சரியாமோ - இருந்திடல் - மாடம் - அச்சாணி - பாரம் - பிணக்கு - வாழிய - விழவு.

20. ஆகின்றன - பாழ்பட்டு - கொந்தளிப்பு - மண்ணுள் - புதையுண்டன - பின்னல் - மூடுபட்டன - கட்டினர் - கற்கருவிகள் - புதைபொருள் - விரிவாகி - கண்டெடு - கழிவு நீர்.

21. பெரியோர் உரை நடை - அஞ்ஞான்று - சாலகம் - மருங்கு - நூற்றாண்டு - தாமோதரம் - கனகசபை - மாயூரம் - வேதநாயகம் - பூண்டி - அரங்கநாதன் - சுப்பிரமணியன் - கலைப்பண்பு - பழந்தமிழ் - தமிழாசிரியர் - இயற்றியவர் - வழுவாதபடி.

22. மறைப்புண்டு - சின்னம் - கட்டடம் - பண்டைக் காலம் - உலகறிய - ஷாஜஹான் - தாஜ்மஹால் - மொகலாயர் - உலகத்தார் - திருமலை நாயக்கர் - அறிவிப்பன -

அஜந்தா - கல்வெட்டு - விஜய நகரத்து - காலத்தவை - பழக்கவழக்கம் - பாதுகாப்பு - பொறுப்பு - தெரிவிப்பவை.

23. அளிக்கும் - ஜோசப் ஸ்டாலின் - அரசியல் - பெருக்கிக் கொள் - கிளர்ச்சி - சிறைத் தண்டனை - மன மார - பிரிட்டிஷ் - இராம்ஸே மாக்டொனால்டு - வெற்றி - துருக்கி - கமால் பாஷா - போர்த்திறன் - செல்வாக்கு - போர்ப்பயிற்சி - பெருமக்கள் - இரகசியம் - தன்னம்பிக்கை - விடாமுயற்சி - இழவாதே - சலிப்படையாதே - ஏற்றுக் கொண்டு - ஏழ்மை.

24. அடிமைத்தனம் - ஏழைச்சிறுவர் - மன உறுதி - கவர்ந்தார் - இறுதி - விரதம் - நிறைவேற்றி - நற்செயல் - அழியா - குறிக்கோள் - இடைவிடாது - வாழ்க்கை - செம்மைப் படுத்துவன - மிகச்சிலர் - இலக்குமணசுவாமி - ஆர்க்காடு மரபு - மருத்துவக் கலை - பாடுபடு - பேரா சிரியர் - பிள்ளைப்பேறு - மேற்பார்வையாளர் - சம்பந்த மான - மருத்துவத் துறை - இணையற்றவர் - விரிவான - எஞ்சினீயரிங் கல்லூரி - வழங்கல் - பல்கலைக் கழகம் - ஆட்சிக்குழு - மாற்றங்கள் - ஐரோப்பா - மாநாடு - சார்பாக - இடையறாது - இராவ்பகதூர் - திவான்பகதூர் - சர் - நலன் - முன்மாதிரி - இறைவன் - வேண்டுவோமாக.

25. படையெடுத்து - புறப்பட்டு - காதலர் - வெறி - கடும்போர் - கவலைப்பட - தயாராய் - அனுமதி - மறக்குடி - பெற்றால் - மீள்வேன் - இன்றேல் - துறப்பேன் - ஆவி - மருகன் - முனைவது - ஆசி - மகிழ்ச்சிக் கண்ணீர்.

145864
சென்னை-600 008.

ϕc

THAMARAI VACHAKAM

BOOK V FOR STANDARD V

BY

Dr. M. RAJAMANIKKAM, M.A., L.T., M.O.L., PH.D.

THE NATIONAL PUBLISHING CO.
6, KONDI CHETTY STREET, MADRAS-1

Copyright] [As. 10